# க. பொ. த. உயர் பரீட்சையில் சித்தியெய்தி தகுதிபெறும் சகல மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதி

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையிற் சித்தியடைந்து, தகுதி பெறுகின்ற அனைத்து மாணவர்களுக்கும். இந்த நடப்பு ஆண்டிலிருந்தே பல்கலைக்கழகப் பிரவேச அனுமதி வழங்கப்படும். இந்த மகிழ்ச்சியளிக்குந் தகவலைப் புதிய கல்வி-உயர் கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அறிவித்துள்ளார். அவர் இதுபற்றி மேலும் கூறுகையில்:- இதுவரைகாலமும், நான்கு பாடங்களிலும் நன்கு சித்தியடைத்து, தகுதி பெற்றிருந்தும்; மிக, மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினரே பல்கலைக்கழகப் பிரவேசஅனுமதி பெற்று வந்தனர். அதனால், உண்மையிலேயே உயர்கல்வி பெறத்தகுதியும், ஆற்றற்திறனும் இருந்தும் பலர் அநியாயமாக அவ்வுயர்கல்வி பெறும் வாய்ப்பை இழந்து வந்துளர். இன்றும் இழந்து வருகின்றார்கள். இந்தப் — 8ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

# முரசொலி

மலர் 04 இதழ் 64 திங்கள் 09-04-1990 (பங்குனி 27) ரமழான் 12

தீவக கடற்பகுதியில் அத்துமீறி மீன் பிடித்த

# தமிழக மீனவர்களை புலிகள் திருப்பி அனுப்பி வைத்தனர்

## தம்மை மனிதாபிமானமாக நடத்தியதாக இந்திய மீனவர்கள் தகவல்

தமிழ் நாட்டிலிருந்து வந்து நெடுந்தீவு நயினாதீவு அனலைதீவு எழுவைதீவு புங்குடுதீவு ஆகிய கடற் பகுதிகளில் அத்துமீறி மீன் பிடித்துக்கொண்டிருந்த 500க்கும் அதிகமான இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் கடலிலிருந்து அழைத்து வந்தனர், இவர்கள் நேற்று மீள தமது தாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை மூன்று மணியளவில் நெடுந்தீவு கடல்பகுதியில் வைத்து இவர்களை விடுதலைப் புலிகள் அழைத்துச் சென்று புங்குடுதீவுகுறிகாட்டுவான் அமெரிக்க மிஷன் பாடசாலையில் தங்க வைத்தனர்.

அதே சமயம் இலங்கை கடற்படையினராலும் தடுத்து வைக்கப்பட்ட சில இந்திய மீனவர்களை விடுதலைப் புலி — 8-ம் பக்கம் பார்க்க

## பகல் காட்சி நேரம் மாற்றம்

யாழ் நகரத் திரையரங்குகளின் காட்சி நேரங்கள் மாற்றியமைக்கப்பட்டதையடுத்து ஒவ்வொரு திரையரங்குகளிலும் வித்தியாசமான நேர அட்டவணையில் சினிமா ஆரம்பமாகின்றது. இதனால் சினிமா ரசிகர்கள் ஏமாற்ற மடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்கள் திரையரங்குகளுக்கு களவாக செல்வதனாலே பாடசாலை நேரங்களில் சினிமாக்காட்சிகள் தடை செய்யப்பட்டுள்ளன.

மாணவர்கள் பாடசாலை நேரத்தில் திரைபடங்களுக்கு செல்வது பற்றியும் அதனால் ஏற்படும் சமூதாய சீர்கேடுகள் பற்றியும் முரசொலி நேரடி றிப்போட்டில் சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது (03

**உள்ளே**

வடபகுதிக்கு விஜயம் செய்யவுள்ள இந்து கலாசார இணை அமைச்சர் பி. பி. தேவராஜ் முரசொலிக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி ...4ஆம் பக்கம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன

## நுண்கலை கலைஞர் தேர்வு 16-ம் திகதி ஆரம்பமாகிறது

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நுண்கலைப் பிரிவுகளுக்கு கலைஞர்களை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு இம்மாதம் 16-ம் திகதி ஆரம்பமாகும் என இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன — 8-ம் பக்கம் பார்க்க

## இலங்கைக்குப் போதை மருந்து வருடத்தில் 4 தோன் வருகிறது

ஒவ்வொரு வருடமும் நான்கு தொன் போதை மருந்து இலங்கைக்கு கடத்தி வரப்படுவதாகத் தெரியவருகின்றது.

போதைப்பொருள் தடுப்பு நிர்வாகம் வெளியிட்டுள்ள தகவல்களில் இருந்தே மேற்படி விடயம் தெரியவந்துள்ளது.

தற்போது போதைவஸ்து கடத்தலில் பெண்களே ஈடுபட்டு வருவதாகவும், இலங் — 8 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் அரச திணைக்களங்களில் அதிகாரிகளுக்கு பற்றுக்குறை

யாழ்மாவட்டத்தில் உள்ள பல அரச திணைக்களங்களில் அதிகாரிகள் பற்றுக் குறையுள்ளதால் அத்தியாவசியவேலைகள் ஸ்தம்பிதமடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பல அத்தியாவசியமான வேலைகளை ஒரு அதிகாரியே மேற்கொண்டுவருகின்றார். இதனால் விரைவாக அவ்வேலைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ் கல்வித்திணைக்களம் யாழ் மாவட்ட செயலகம் யாழ் வீடமைப்புத்திணைக்களம் உட்பட பலமுக்கியதிணைக்களங்களிலே அதிகாரிகள் பற்றுக் குறை ஏற்பட்டுள்ளது. (03

## புலமைப் பரிசில் பெற்று வெளிநாடு சென்றோரில் 75 வீதமானோர் திரும்பவில்லை

இலங்கையில் இருந்து புலமைப்பரிசில் பெற்று உயர் கல்வி கற்பதற்காக வெளிநாடுகளுக்கு செல்வோரில் எழுபத்தைந்து சதவீதமானவர்கள் இலங்கைக்கு திரும்புவதில்லை என தெரியவந்துள்ளது சிங்களவர்களோ வட தமிழர்களோ உயர்கல்வியை முடித்தபின்னர் இங்கு வர விரும்புவதில்லை எனவும் இதனால் — 8-ம் பக்கம் பார்க்க

## தமிழ்மக்களின் பாதுகாப்புபடைஎன்றரீதியிலேயே நாம் சீருடையை அணிந்துள்ளோம் - ராஜன்

விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியினரின் தற்போதைய சீருடையை மக்கள் சந்தேக கண்கொண்டு பார்கிறார்கள் அப்படி நோக்காதுஎம்மை போராளிகளாக தமிழ் மக்களின் படையாகநோக்கின் இவ்வெண்ணம் எழாது தமிழ் மக்களுக்குக்கான பாதுகாப்புப் படை என்ற ரீதியிலேயே இச்சீருடையை அணிந்துள்ளோம். இவ்வாறு விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு ராஜன் தெரிவித்தார்.

மறைந்த தேசாபிமானி திரு ஞானசேகரத்தின் புதியதோர் —8-ம் பக்கம் பார்க்க

## செட்டிகுள அகதிகள் ஐந்து வருடங்களாக சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலை

1985-ம் ஆண்டில் செட்டிகுளம் பகுதியில் இருந்து வெளியேறிய அகதிக் குடும்பங்கள் இன்னமும் தமது வீடுகளுக்கு திரும்ப முடியாது இருக்கின்றனர்

முன்னர் இப்பகுதியில் இலங்கை இராணுவ முகாம் ஒன்று இருந்தது. இதைத் தொடர்ந்து 1987ல் இந்திய இராணுவ முகாம் ஒன்றும் இப்பகுதியில் அமைக்கப்பட்டது.

தற்போது இப்பகுதியில் — 8-ம் பக்கம் பார்க்க

## செயலக அதிகாரி நிவாரணப் பணத்துடன் தலைமறைவு

மட்டுநகரில் புனர்வாழ்வுத்திட்ட கொடுப்பனவு காசோலை மோசடியில் அரச உயரதிகாரிகளும் சம்பந்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது நிவாரணக் கொடுப்பனவு காசோலை பெற கிராமசேவகர் தெரிவு செய்த விண்ணப்பத்தாரியை உதவி அரச அதிபர் சிபார்சு செய்யவேண்டும். இதன் பின் வவுச்சர் தயாரிக்கப்பட்டு பரீசிலிக்கப்பட்டு உறுதி செய்யப்பட வேண்டும். இதன் பின்னரே காசோலை எழுதப்பட்டு அதிகாரி கையொப்பம் இட வேண்டும். ஆனால் செயலக அதிகாரி ஒருவர் தானே வவுச்சரை தயாரித்து காசோலையைப் பெற்று வர்த்தகர் ஒருவரிடம் மாற்றி தாமே பணத்தையும் பெற்றுக் கொண்டுள்ளார் இவர் தற்போது கொழும்புக்கு சென்று விட்டதாக கூறப்படுகிறது. இதேவேளை மட்டுநகர் கச்சேரியில் ஓர் உயர் அதிகாரி சில வெற்றுக் காசோலைகளைக் கிழித்து எடுத்து முஸ்லிம் வர்த்தகரிடம் பணமாக மாற்றிக் கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது (5)

## அறிவித்தல்

ஹோட்டல் பரடைஸ் 6-4-90 முதல் மீண்டும் தன் வழமையான சேவையை ஆரம்பித்துள்ளதை வாடிக்கையாளர்களுக்கும் முன்னைய ஊழியர்களுக்கும் தெரியப் படுத்திக்கொள்கின்றது புதிய ஊழியர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**ஹோட்டல் பரடைஸ்**

91, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

04090



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

7½ அடி சுற்றளவு கொண்ட ஒரு உயர்ந்த மகோகனி (Mahogany) மரம் குளமங்கால் மல்லாகம் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திற்கு அருகாமையிலுள்ள ப. நோ. கூ. சங்கக் கடைக்கு முன்பாக விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் 20.04 90 மு. ப 12. 00 மணிக்கு முன்னதாக ஆலய வண பங்குத்தந்தையுடனோ அல்லது ஆலய நிர்வாக சபைச்செயலாளர் திரு. யு. பாக்கியநாதர் என்பவருடனோ நேரடியாக தொடர்பு கொண்டு தங்கள் கேள்விகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்கவும்

04073

### தேவை

அச்சுவேலி லக்ஷ்மி விலாஸிற்கு பலகாரம் தயாரிப்பவர், தேநீர் தயாரிப்பவர், சப்ளையர் உடன் தேவை. புதன் காலை 10 மணிக்கு முன் நேரில் வரவும் 04080

### கல்வி

லண்டன் (Pitman) Typing. Shorthand யூலை 90 பரீட்சைக்குத் தோற்ற விரும்புவோர் 14 4. 90 இற்கு முன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
BOND INSTITUTES
58A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

04091


## உயர்தரவகுப்பு ஆரம்பமாகும்

க. பொ. த உயர்தர வகுப்புக்களை நடாத்துவதற்கான உத்தியோக பூர்வமான அங்கீகாரம் நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்திலிருந்து மேற்படி பாடசாலையில் வகுப்புக்கள் நடைபெற்று வந்தாலும் சில தினங்களுக்கு முன்பே வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினாலும், கல்வி அமைச்சினாலும் உத்தியோக பூர்வமான அங்கீகாரம் வழங்கப் பட்டது.


### விற்பனைக்கு

ஏராளமான மிகப் பழைய ஆனந்தவிகடன், குமுதம் கல்கி மற்றும் சஞ்சிகைகள் விற்பனைக்கு, பழைய புத்தகங்கள் வாங்கப்படும் மாணவர்களுக்கு ஏற்ற புத்தகங்களும் உண்டு வெற்றுசீமெந்து, கோழித்தீன் உறைகள் உரப் பைகள் வாங்கப்படும். Second Hand Book House 13 / 6 ஸ்ரான்லி றோட், இலங்கைவங்கிக்கு முன் யாழ்ப்பாணம்.

04062


## அம்புலன்ஸ் விபத்தில்

கர்ப்பிணிப் பெண் உட்பட ஆறு பேரை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் ஒன்று நாநூறு அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியது

இச்சம்பவம் வேல்வல என்னுமிடத்தில் நடைபெற்றது. வெலிமடையிலிருந்து பதுளை ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழியிலேயே ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டதால் காயப்பட்ட பெண்மணி சிறிது நேரத்தில் பதுளை ஆஸ்பத்திரியில் குழந்தையொன்றைப்பிரசவித்தார். மூவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


# கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in BASIC Language

ஆரம்பம்: 11 April 1990 3-30 p. m.
(திங்கள், புதன், வெள்ளி)

15 April 1990 11-00 a. m
(சனி, ஞாயிறு)

- LOTUS 1-2-3

ஆரம்பம்: 10 April 1990 9-00 a m

- DBASE III

ஆரம்பம்: 21 April 1990 9-30 a. m.

- COBOL

ஆரம்பம்: 12 April 1990

G. C. E. (O/L) படித்த இருபாலாரும் சேரலாம்.
மிகவும் விளக்கமான முறையில் பயிற்சி அளிக்கப்படும்
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

**UNIKCO COMPUTER CENTRE**

No. 5, POWER HOUSE ROAD
2nd, Lane, JAFFNA

04096


## பூநகரியில் நினைவுத் தூபி

பூநகரி வாடியடி கோட்டை இராணுவ முகாம் தகர்க்கப்பட்டபோது வீரமரணம் அடைந்த ஏழு வீரவேங்கைகளின் நினைவாகப் பூநகரி பஸ் நிலையச் சந்தியில் தூபி ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது பூநகரி வர்த்தக சங்கத்தினரால் அமைக்கப்படும் இத்தூபி வேலை விரைவில் முடிக்கப்பட்டுத் திறப்புவிழா நடைபெறுமெனவும் இவ்விழாவில் பல விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர்கள் கலந்து கொள்வார்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. (29)


## STOCK BROKERS/INSURANCE AGENTS

Agents Required to Canvass Share & Insurance Business

**JAFFERJEE BROTHERS**

P. O. BOX 1180, 150, ST. Joseph's Street
Colombo 14

04071



## O/L DEC. 90

வதுப்புகளுடன் இம்முறை
9-ம், 10- ஆண்டுகளுக்கான
**புதிய வகுப்புகள்**

ஆரம்பம்: 10 - 04 - 1990

**BOND INSTITUTES**

58A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.

04091


## மாணவருக்கு லயன்ஸ் சேவை

நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் தமது பிரிவிலுள்ள காசிப்பிள்ளை வித்தியாசாலை, பார்வதிவித்தியாசாலை, ஶ்ரீமன்கத்தோலிக்கப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப் போஷாக்குச் சத்துள்ள 'சூப்' வழங்கப்பட்டதாக அறிவித்துள்ளனர் மற்றும் கண்பார்வை குறைந்த 75 பேருக்கு மூக்குக்கண்ணாடி வழங்கப்பட்டதாகவும் இக்கழகப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (33)

## வயாவிளான் பிள்ளையார் ஆலய உற்சவம்

வயாவிளான் மானம்பராய்ப் பிள்ளையார் ஆலய மகோற்சவம் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமைபகல்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

சென்ற வருடங்களைப்போல் இம்முறையும் கொடியேற்றம், தண்ணீர்ப்பந்தல் என்பன பொதுமக்களின் உபயமாக நடைபெறவிருப்பதனால் அதற்கான நிதி உதவிகள் ஏற்றுக் கொள்ளப்படுமென ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது.


COMMERCIAL BANK

கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலும்
மகத்தான சேவையாற்றி மக்கள் மனதில்
நிரந்தர இடத்தை வகிக்கும்

**இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை**

எமது பாரம்பரியத்தைப் பேணும் வகையில் எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று 14.04.90 காலை 8மணி தொடக்கம் 9மணி வரை கூடும் சுபவேளையில் வாடிக்கையாளர்களுக்குப் பல புத்தாண்டுச் சலுகைகளையும் பரிசுகளையும் வழங்கவிருப்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

உங்கள் ஆதரவுடன் மென்மேலும்
எமது பணி தொடர
அன்புடன் வருக வருகவென அழைக்கிறது
உங்கள் இலங்கை வர்த்தக வங்கி

முகாமையாளர்

04076



## மக்கள் வங்கி அடைவு நகைகள் வழங்கல்
## முல்லைத்தீவு, மன்னார் மாவட்டம்

### முல்லைத்தீவு கிளை

இக்கிளைக்குரிய நகைகளின் ஒருபகுதி கடந்தவாரம் மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்பட்டன. மிகுதி அடைவு நகைகள் யாவும் இம்மாதம் 10 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு ஜெமினிதியேட்டர் கட்டிடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி பண கரும பீடத்தினூடாக வழங்கப்படும். வழங்கும் திகதிபற்றிய மேலதிக விபரங்களை முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளருடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளவும்.

### மாங்குளம் கிளை

இக்கிளைக்குரிய நகைகள் இம்மாதம் 17 ஆம் திகதி மட்டில் மாங்குளம் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நகைகள் வந்து சேர்ந்ததும் நகைகள் மீளளிப்பு ஆரம்பமாகும்.

வழங்கும் திகதிபற்றிய மேலதிக விபரங்களுக்கு மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளருடன் இம்மாதம் 17-ம் திகதிக்குப் பின்னர் தொடர்புகொள்ளவும்.

### மன்னார் கிளை

இக்கிளையில 26.08.83 வரை அடைவு வைத்து 21 09. 89 வரை மீளப் பெறுவதற்காக பணம் கட்டியவர்களுக்குரிய நகைகள் இம்மாதம் 10 ஆம் திகதியளவில் மன்னார் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2-ம் கட்டமாக 26.08.83 இன் பின்னர் அடைவு வைத்த நகைகள் மன்னாருக்கு கொண்டு வரப்படும். முதல் கட்ட நகைகளுக்குரியவர்கள் இம்மாதம் 10ஆம் திகதியின் பின்னர் மன்னார் கிளை முகாமையாளருடன் தொடர்புகொண்டு வழங்கும் திகதிபற்றிய மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளவும்,

பிரதேச முகாமையாளர்
04085

# இதயநாதம்

திங்கட்கிழமை 09-04-1990

**நல்வாக்கு**

உங்களுடைய இன்பத்துக்காக மற்றவர்களுக்குத் தீங்கு செய்யக் கூடாது. அவ்வாறு தீமை செய்தால் பிறவித் துன்பம் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும்.

-கௌதம புத்தர்.

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## இன வாதமும் புதிய ஞானமும்

நாட்டின் இனப்பிரச்சினை விரைவில் தீர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். அதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இப்போது ஈடுபட்டுள்ளது.

விட்டுக் கொடுப்பதன்மூலமும் பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்துவதன் மூலமும் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்.

இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இனப்பிரச்சினை என்பது இன்று நேற்று உருவான ஒன்றல்ல.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் முதலே இனப்பிரச்சினை இங்கே இருந்து வந்துள்ளது.

உலகில் இனப்பிரச்சினை இல்லாத நாடே இல்லையெனலாம்.

இன ரீதியான பிரச்சினைகள் இல்லாவிட்டாலும் மொழி, மதம், நிறம் சம்பந்தமான பிரச்சினைகளாவது வேறு நாடுகளில் இல்லாமலில்லை.

ஒற்றுமைக்கு உதாரணமாகத் திகழ்ந்த பல இன, மொழி குடியரசுகளடங்கிய சோவியத் ராச்சியத்திலேயே இன்று பிரிவுகளின் வித்துக்கள் விதைக்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு நாட்டின் தலைவரும் தமது நாட்டில் இன, மொழி, மத, நிறப் பாகுபாட்டுப் பிரச்சினை இருக்கின்றது என்பதை ஒத்துக்கொண்டதில்லை.

இந்நிலையில் இலங்கை அரசின் ஜனாதிபதி இலங்கையில் இனப்பிரச்சினை உண்டு என்று ஒத்துக் கொண்டதுடன் அதை உடன் தீர்க்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அனேகமாக நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து அடையும்போது அரசுகள் மக்களைத் திசை திருப்ப இன, மொழி, மத, நிற வாதத்தைப் பரப்புவது வழக்கம்.

இந்த வகையில் இலங்கையில் இனவாதம் அரச கட்டிலில் உள்ளவர்களாலேயே கடந்த காலங்களில் வளர்க்கப்பட்டு வந்துள்ளது.

இதன்மூலம் நாட்டின் பொருளாதார வீக்கம் மக்கள்முன் மறைக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாகச் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட மாறுதல் அரசை நிலைகுலையச் செய்திருந்தது.

இனவாதத்தை வளர்ப்பதால் அதில் தாமே சிக்கிச் சீரழிய வேண்டிவரும் என்பதை அரசும், சில சிங்கள மக்களும் உணர்ந்தனர்.

முள்ளை விதைத்துவிட்டு நெல்லை அறுக்க முடியாது போல, தாம் விதைத்ததன் பலனையே அரசு மக்களிடம் பெற வேண்டியநிலை ஏற்பட்டது.

இந்த ஞானோதயம் பிந்தி ஏற்பட்டாலும் ஒரு நல்ல மனமாற்றமே.

தனது தற்போதைய நெருக்கடி நிலைக்கு மட்டும் இதை ஒரு தீர்வாக அரசு கருதக் கூடாது.

உண்மையில் இனப்பிரச்சினையானது தீர்க்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தை அரசு உடனே செயற்படுத்தவேண்டும்.

ஜனாதிபதி கூறியதுபோல் புரிந்துணர்வு மூலமும், விட்டுக்கொடுத்தல் மூலமுமே இதைச் சாதிக்கலாம் என்பது உண்மை.

இதைத் தமிழ், சிங்கள மக்களும், தலைவர்களும் மக்கள் நலனை உத்தேசித்து ஏற்றுக்கொண்டு செயற்படவேண்டும்

## வலி. வடக்கில் நாட்டார் பாடல் போட்டிகள்

வலிவடக்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் ''நாட்டார் பாடல்'' போட்டிகள் இடம் பெறவுள்ளன. இந்த வகையில் இளவாலை வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் எதிர்வரும் 11-ம் திகதி நாட்டார் பாடல் போட்டி நடைபெறவுள்ளது. பதினைந்து வயதிற்குக்கீழ் ஒரு பிரிவும், பதினைந்து வயதிற்கு மேல் ஒரு பிரிவுமாக, இரு பிரிவுகளாக இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

## கீரிமலையில் நகுலேஸ்வரர் சனசமூக நிலையம்

கீரிமலையில் புதிய நகுலேஸ்வரர் சனசமூக நிலையமும், மதிவிளையாட்டுக்கழகமும் கடந்த 25-ம் திகதி திறந்து வைக்கப்பட்டது. கீரிமலை பஸ்நிலைய வெளிக்கு அருகாமையில் புதிய சிறிய கட்டடம் கட்டப்பட்டு அக்ககட்டத்திலேயே இந்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திறப்பு விழாவிற்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. சிவமகாராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார் கௌரவ விருந்தினராக வலிவடக்கு உதவி அரச அதிபர் திரு. வை இராசையா கலந்து சிறப்பித்தார் இவ்விழாவின்போது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (25)

## வர்த்தகர்களுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம்

வியாபாரிகளின் அளவைக் கருவிகளுக்குக் கிளிநொச்சி மாவட்டத்தில் முத்திரையிடும் நடவடிக்கைகள் முடிவடைந்து விட்டன என்று அளவைகள் நிறுவைகள் திணைக்களப் பரிசோதகர் திரு. கா. நாகலிங்கம் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமது அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு முத்திரையிடத் தவறிய வியாபாரிகள் இனிமேல் யாழ். செயலகத்திலேயே முத்திரையிட்டுக் கொள்ளலாம் என்றும், எதிர்வரும் மே மாதம் சாவகச்சேரி உதவி அரச அதிபர் அலுவலகத்தில் முத்திரையிட்டுக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (36)

## திருமலையில் நஷ்டஈடு வழங்கப்படும்

திருகோணமலை மாவட்டத்தில் தீவிர வாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் தமிழ்' சிங்கள, முஸ்லிம் ஆகிய சகல சமூகத்தவர்களைச் சேர்ந்த நூறு குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து 12ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

## தலவாக் கொல்லையில் தொ. காங்கிரஸ் மேதினக் கூட்டம்

இலங்கைதொழிலாளர் காங்ரஸின் மேதினக் கூட்டம் இம்முறை தலவாக்கொல்லையில் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மத்திய மாகாணசபை உறுப்பினர் திரு கந்தசாமி செய்து வருகிறார் இக்கூட்டத்தில் அமைச்சர் சௌ, தொண்டமான் விசேட அதிதியாகக் கலந்து கொள்ளுவார் சுமார் 2000 இளைஞர்கள் மேதின ஊர்வலத்தில் பங்குபற்றுவார்கள்.

## கோப்பாயில் நெருப்புக்காய்ச்சல்

கோப்பாய் வடக்குப் பிள்ளையார் கோவிலடிப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் நோய் வெகு வேகமாகப் பரவி வருகின்றது. இந்நோய் பரவுவதற்கு இப்பகுதியில் காணப்படும் பொதுக்கிணற்றிலிருந்தும் நீரைப் பருகுவதே காரணமாக இருக்கலாம் எனவும் நம்பப் படுகிறது. கூடுதலாக இக்கிணற்றிலிருந்தும் நீரைப் பருகுவோரே இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமையால் இக்கிணற்று நீரைப் பருகிட இப்பகுதி வாழ் மக்கள் தயங்குகின்றனர்.

## நூல்நிலையங்கள் மாலைவரை திறந்திருக்கும்

வாசகர்களின் நலன் கருதி கொக்குவில், நல்லூர் நூல் நிலையங்களை இனிமேல் மாலை ஆறுமணி வரை திறந்து வைத்திருக்குமாறு நல்லூர் பிரதேச அபிவிருத்திசபை அறிவித்துள்ளது: இதுநாள்வரை மேற்படி நூல் நிலையங்கள் மாலை ஐந்து மணியுடன் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (41)

## ரூபவாகினியில் பார்க்கலாம்

நாடாளுமன்ற நடவடிக்கைகளை வானொலியிலும் தொலைக்காட்சியில் ஒலி, ஒளி பரப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரும் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

பொதுமக்கள் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளும் தமது பிரதிநிதிகளையும், பாராளுமன்றத்தில் இடம் பெறுகின்ற விடயங்களையும் பார்க்க வேண்டும் என்று அப்பிரேரணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மதயானை வீடுகளைப்பிடுங்கியது

காட்டு யானை ஒன்று ஊருக்குள் புகுந்து 20 வீடுகளை அழித்து நாசம் செய்தது வவுனியாவில் மகா கச்சக்கொடி என்ற இடத்தில் இந்த வீடழிப்புச் சம்பவம் இடம் பெற்றதில் எவ்வித உயிர் இழப்புகள் இடம்பெறாதது அதிசயமே;

# பொடிச் செய்திகள்

## க.பொ. த.சாதாரண பெறுபேறுகளின்பின் வகுப்புக்கள் ஆரம்பம்

தற்போது, நடைபெற்று வரும் க. பொ. த சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகள் வருவதற்கு முன்பாக க பொ, த, உயர்தர 1992ஆம் ஆண்டிற்கான வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டாம் என தனியார்கல்வி நிறுவன ஒன்றியம்சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் கேட்டுள்ளது.

## பண்டத்தரிப்பு தமிழ்த்தினப்போட்டி

பண்டத்தரிப்பு கோட்ட கொத்தணிகளுக் கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று காலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையேநடந்த தமிழ்த்தினப் போட்டிகளில் முதலாம் இடம் பெற்றவர்கள் கலந்துகொள்வார்கள். இயல். இசை நாடகம் ஆகிய முத்தமிழ்ப் போட்டிகளும்இதனுள் அடங்குகின்றன. (25)

## காரைநகரில் ஆண்டுவிழா

வாரிவளவு நல்லியக்கச் சபையின் பதினேழாவது ஆண்டு நிறைவையொட்டி புதுவருடப் போட்டிகள் இம்மாதம் 16ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரை வாரிவளவு நல்லியக்கச்சபை திறந்த வெளி அரங்கில் நடைபெறும். 'போரூட்.நிறுவனதிட்டமிடல் இயக்குநர் திரு எம் எல் மரிக்கார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (45

## திருநெல்வேலியில் கட்டாக்காலிகள் கொல்லப் பட்டன

திருநெல்வேலிப் பகுதியில் அண்மைக்காலத்தில் அறுபதிற்கும் மேற்பட்ட கட்டாக்காலி நாய்கள் கொல்லப் பட்டுள்ளன. சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையுடன் நிர்வாக உத்தியோகத்தரின் மேற்பார்வையில் இந்த கட்டாக்காலி நாய் அழிப்பு வேட்டை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (41

## நிரந்தரமாக நியமிக்கக் கோரிக்கை

நெடுந்தீவு மக்கள் தமது பகுதி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு ஒரு நிரந்தர உதவி அரசாங்க அதிபரை நியமித்து உதவும்படி வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்கள் நீண்டகாலமாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு உதவி அரசாங்க அதிபரொருவர் நிரந்தரமாக நியமிக்கப்படவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது (24)

## வடமராட்சி கிழக்கில் சிற்றூர்க் கிளைகள்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நாகர் கோவில் தொடக்கம் போக்கறப்பு வரையுமுள்ள 11 கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் விடுதலை புலிகளின் மக்கள் முன்னணியின் சிற்றூர்க் கிளைகள் அண்மையில் அமைக்கப்பட்டன. இதற்கான ஒழுங்குகளை வடமராட்சி கிழக்கு பொறுப்பாளர் திரு. விஞ் செய்திருந்தார். (18)

## அரச பிரசுரம் இங்கு வந்தது

கொழும்பிலுள்ள இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களம் எதிர்வரும் தமிழ்- சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு தகவல் திணைக்களம் மூன்று மொழிகளிலும் வெளியிட்ட பிரசுரம் ஒன்றை யாழ் மாவட்டதிலுள்ள இந்து சமய நிறுவனங்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

அரசாங்கம் புதுவருடத்தை முன்னிட்டு தேசியப் பத்திரிகைகள் மூலம் நடாத்தும் பல்வேறு போட்டிகள் பற்றியும், புதுவருடப்பிறப்பு கருமங்கள் பற்றியும், புத்தாண்டு வாழ்த்துக்களும் இந்தச் சிறிய சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது. (13)

## இருளில் மூழ்கும் வீதிகள்

கோண்டாவில் பகுதி ஐந்து சந்திகளிலும் பொருத்தப்பட்டுள்ள மின்சார விளக்குகளில் நான்கு முற்றாக பழுதடைந்து விட்டன. எஞ்சிய ஒரு சந்தி விளக்கும் ஐந்து நிமிடத்துக்கொருமுறை நின்று, நின்று எரியும் நிலையிலுள்ளது.

நீண்ட காலமாக இந்த விளக்குகள் திருத்தப்படாமல் உள்ளமையினால் இப்பகுதி முற்றாக இருளடைந்து காணப்படுவதுடன், இரவு நேரங்களில் மக்கள் பலவாறான அசௌகரியங்களை எதிர்நோக்குவதும் குறிப்பிடத்தக்கது. (41)

## மதிய உணவு வழங்கக்கோரிக்கை

அடுத்த தவணை ஆரம்பத்திலிருந்தாவது குடத்தனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க உத்தரவு பிறப்பிக்குமாறு இப்பாடசாலை அபிவிருத்திச்சபை ஜனாதிபதி ஆர் பிரேமதாஸவைக் கேட்டுள்ளது.

இம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டது சம்பந்தமாக யாழ். கல்வித்திணைக்களத்திற்குப் புகார் செய்தும் கல்வித் திணைக்களம் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காது மௌனம்சாதிப்பதையடுத்தே பாடசாலை அபிவிருத்திச்சபை இது பற்றி ஜனாதிபதிக்கு முறையீடு செய்துள்ளதாக பாடசாலை அபிவிருத்திச்சபையினர் முரசொலிக்குத் தெரிவித்தனர்.

இந்து சமய இந்து கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள்
யாழ் விஜயத்தையொட்டி 'முரசொலி'க்கு வழங்கிய பிரத்தியேகப் பேட்டி

# நான் ஒரு அமைச்சராக வரவில்லை

# தமிழன் என்ற ரீதியில் வருகிறேன்



**"சிவபெருமானின் படைப்புக்கள் தமிழ் எழுத்துக்கள் இந்த எழுத்துக்களை மாற்றுவது சிவபெருமானை நிந்திப்பதற்குச் சமமானதாகும்"**

"நான் வடபகுதிக்கு அரசியல் நோக்கத்திற்காக விஜயம் செய்யவில்லை. நான் அரசியல் வாதியுமில்லை. யாழ்ப்பாணம் தமிழ் வளர்ந்த இடம். தமிழை வளர்த்த பூமி, தமிழ் அறிஞர்கள் வாழும் இடம்.

இப்படியான பெருமைமிக்க பிரதேசத்திற்கு செல்லவேண்டும். அங்குள்ள—பெரியவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், தமிழ் அறிஞர்கள் எல்லோரையும் சந்திக்கவேண்டும் அவர்களுடன் மனம் விட்டு உரையாடவேண்டும் என்பது எனது நீண்ட நாளைய ஆசையாகும்.

நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவனல்ல தமிழ் பேசுகின்ற மக்களின் சார்பில் ஒரு பிரதிநிதியாக யாழ் வருவதையே விரும்புகின்றேன்.

நான் இந்து சமய, இந்து கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சராகப் பொறுப்பேற்ற காலம் ஒரு இக்கட்டான காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் எங்கள் திட்டங்கள் எதனையும் நிறைவேற்ற முடியவில்லை.

எமது அமைச்சுக்கு போதிய அளவு நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் நமது திட்டங்களை நிறைவேற்றுவதில் பல இடையூறுகளைச் சந்திக்க வேண்டி இருந்தது.

எனது யாழ். விஜயத்தின் முக்கிய நோக்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள அறிஞர்கள், முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடி அவர்களது ஆலோசனைகளைப் பெற்று எமது அமைச்சு புதிய திட்டங்களை உருவாக்கி செயற்படுத்துவதேயாகும்,

1983 ற்குப் பின்னர் பல ஆலயங்கள் முற்றுகச் சேதமாக்கப்பட்டுள்ளன. புகழ்மிக்க ஆலயங்கள் பல பாதிப்படைந்துள்ளன. இவ் ஆலயங்களை நேரில் சென்று பார்வையிட விரும்புகின்றேன்.

ஆலயதர்ம கர்த்தாக்கள், சமய அறிஞர்கள் போன்றவர்களுடன் உரையாடி இந்து சமய வளர்ச்சிக்கு எவ் வழிகளில் உதவ முடியும் என்பதையும் அறிய விரும்புகின்றேன் என்று கூறியவாறு 'முரசொலி'க்கு பேட்டிதர ஆயத்தமானர்.

## சந்திப்புக்கள்

'ரக்ஷண மந்தரய' கட்டடத்தில் இயங்கும் அமைச்சரின் அலுவலகத்திற்கு நான் சென்றபோது சோதனைக்குஉட்படுத்தப்பட்டு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டேன். அமைச்சரின் அலுவலக வரவேற்புப் பிரிவில் பல பொது மக்கள் அமைச்சரைச் சந்திக்க ஆவலாகக் காத்திருந்தனர்.

நான் அமைச்சரை பேட்டி காண அலுவலகத்திற்குள்ளே நுழைந்தபோது எவ்வளவு விரைவாக அவரிடம் இருந்து பேட்டியைப் பெற்று வெளியேறமுடியுமோ அவ்வளவு விரைவாக வெளியேறி விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டேன்.

ஏனென்றால் மக்கள் பலர் தமது குறைகளை அமைச்சரிடம் சொல்லக் காத்திருக்கும் வேளையில் நான் பேட்டிக்காக அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

சிரித்த முகம் எளிமையான தோற்றம். அமைச்சர் என்ற மமதை அவரது முகத்தில் காணவே இல்லை. 'முரசொலி' பத்திரிகையில் இருந்து வந்திருக்கின்றேன் என்றதும் புன்சிரிப்புடன் வரவேற்று யாழ்ப்பாணப் பத்திரிகைகளைப்பற்றி விபரங்களைக் கேட்டு அறிந்தார்.

எமது வேண்டுகோளிற்கிணங்க யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளை அமைச்சுக்கு தருவிக்க உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

## புனரமைப்பு

நான் இந்துசமய இந்து கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சரிடம் வடபகுதி கோவில்கள் புனரமைப்பு தொடர்பான கேள்வியுடன் பேட்டியை ஆரம்பித்தேன்.

கோவில்கள் புனரமைக்க உங்கள் அமைச்சு நிதி உதவி செய்கிறதா என்று அமைச்சரிடம்கேட்டபோதுசேதமாக்கப்பட்டகோவில்கள்பற்றிய விபரங்களை நாம் திரட்டியிருக்கிறோம் இதற்குமுதல் அமைச்சுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் விபரங்களை சேகரித்திருக்கிருர்.

இந்தக் கோவில்களுக்கு நிதி உதவி செய்யுமாறு நாம் புனர்நிர்மாண அமைச்சுக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தோம். அவ் அமைச்சிலிருந்து வழிபாட்டு தலங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடுசெய்ய எமக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்படவில்லை. எம்மிடமுள்ள பணம் வீதி புனரமைப்பு உட்பட பல தேவைகளுக்காக செலவிடப்பட்டுவிட்டது என்று பதில் வந்தது.

ஆலய புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு சம்பந்தமாக உத்தரவை நிதிஅமைச்சரே வழங்க வேண்டும். அவரிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை.

நாம் தொடர்ந்து தொடர்பு கொண்டபோது எம்மிடம் நிதி இல்லை, வெளிநாட்டில் இருந்து நிதியைப் பெற்றுக் கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கூறப்பட்டது. இன்னும் இதுபற்றி எழுத்து மூலம் தரப்படவில்லை.

பன்முக வரவுசெலவுத் திட்டத்தில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் இருபத்தைந்து இலட்சம் ரூபாவுக்கு உட்பட்ட செலவுகளுக்கு சிபார்சு செய்ய முடியும். அதே போல மாகாண சபை உறுப்பினர்கள் பத்துஇலட்சம் ரூபாவுக்கு உட்பட்ட செலவுகளுக்கு சிபார்சு செய்ய முடியும்.

இவர்கள் ஆலய புனர் நிர்மாண வேலைகளுக்கு உதவி செய்ய முடியும். சில பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாணசபை உறுப்பினர்களும் ஆலய புனர் நிர்மாண வேலைகளுக்கு தமது நிதியில் இருந்து உதவி செய்துள்ளார்கள்.

நாம் இப்போது ஒவ்வொரு மாகாண சபைக்கும் என ஒதுக்கப்படும் பணத்தில் குறிக்கப்பட்ட ஒரு தொகையை ஆலய நிர்மாண வேலைகளுக்காக ஒதுக்கவேண்டும் என எமது அமைச்சு கேட்டுள்ளது. இதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து நல்ல ஆதரவு கிடைத்திருக்கிறது.

விரைவில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும் ஆலய புனர் நிர்மாண பணிகளுக்கு வேறு என்னவழிகளில் உதவிகளைப் பெறமுடியும் என்பது பற்றி வடபகுதி விஜயத்தில் ஆராய இருக்கிறேன் எமது அமைச்சுக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் ஆலய புனர்நிர்மாண வேலைகளை செய்வது மிகவும் கடினமாகும் என்று அமைச்சர் பதிலளித்தார்.

## மதமாற்றம் ஏன்?

இப்போது இந்து சமயத்தவரை மதமாற்றும் முயற்சி நாட்டில் பரவலாக நடைபெற்று வருகின்றது. மலைநாடு உட்பட வடபகுதியிலும் இந் நிலை காணப்படுகிறது. வடபகுதியில் பின்தங்கிய பிரதேசங்களில் மதமாற்ற முயற்சி தீவிரமாக நடந்துவருகிறது. இதுபற்றி அமைச்சரிடம்கூறியபோது இந்து சமயம் எல்லா மதங்களையும் நேசிக்கிறது.

எல்லா சமயங்களின் உயரிய தத்துவங்களை மதிக்கிறது. இது ஒரு பரந்துபட்ட மதமாகும். இப்போது மக்களுக்கு ஆன்மீக ரீதியில் அமைதி தேவைப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் இடம்பெறும் மதமாற்றம் தறகாலிகமானதே. இதற்காக வேதனைப்படுகின்றேன்.

நாம் இந்து சமயத்தின் உயரிய தத்துவத்தை இளைஞர்களிடையேவேரூன்றச்செய்ய சமயப் பாடசாலைகளை நடத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நாட்டில் பரவலாகக் கருத்தரங்குகளை நடத்தி மக்களுக்கு இந்து சமயத்தைப் பற்றிய அறிவை ஊட்டிவருகின்றோம். "சமுதாயப் பணிகள் – இந்து சமயக் கண்ணோட்டம்" என்ற தலைப்பிலே எமது முதலாவது கருத்தரங்கு நடத்தப்பட்டது,

நாம் ஆன்மீக ரீதியாகவும் நுண்கலைகளுக்கூடாகவும் சமய போதனைகளைச் செய்துவருவதோடு தொழிற் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றோம், சுயதொழில் வேலைவாய்ப்புக்களையும் உருவாக்கி வருகின்றோம்.

மதுரங்குளி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள விபூதித் தொழிற்சாலை இப்போது உற்சாகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. களிமண் மூலம் விக்கிரகம் அமைக்கும் சிறு தொழில் முயற்சிகளையும் ஆரம்பித்துள்ளோம். இதற்கு வங்கி மூலம் கடன்களைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம்.

அறநெறிப் பாடசாலைகள் அமைத்து இயங்க உதவிகள் செய்து வருகிறோம் பண்டாரவளையில் எமது முயற்சியாலும் அங்குள்ளவர்களின் பூரண ஒத்துழைப்பாலும் 20 அறநெறிப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப்படியான பணிகளை நாம் செயற்படுத்துவதன் மூலம் மதமாற்ற முயற்சிகளை தடுத்துநிறுத்த முடியும் இந்து சமயத்தைப் பற்றிய சரியான அறிவை நாம் ஊட்டுவதன் மூலம். எமது சமயத்தை வளர்ச்சி அடையச் செய்ய முடியும்.

## எழுத்துச் சீர்திருத்தம்

எழுத்துச் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளீர்கள். ஆனல் அமைச்சுகளின் உத்தியோக பூர்வ கடிதங்களில் சீர்திருத்தத்தைக் காணவில்லையே என்று குறிப்பிட்ட போது. மெல்ல மெல்ல சீர்திருத்தம் அறிமுகமாகி வருகிறது இப்போதுதான் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து கிடைத்திருக்கிறது. அதற்கிடையில் நீங்கள் அவசரப்பட்டால்...... "தமிழ் மொழியில் கடிதங்கள் வர முதலில் முயற்சிகள் மேற்கொள்ள முயல சீர்திருத்தம் தானக வரும்.'

எழுத்துச் சீர்திருத்தத்தைச் சிலர் எதிர்க்கின்றார்களே... என்று கேட்டதற்கு... நாம் புதிதாக ஒன்றுமே செய்யவில்லை. எல்லா நாடுகளிலும் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சீர்திருத்தத்தையே நாம் மேற்கொண்டுள்ளோம்.

இந்தியாவில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டுவிட்டது. தமிழர்களுக்கு என்று இருக்கின்ற ஒரு நாடு அது. அந்த நாட்டில் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்ததால் இதர நாடுகளும் அதனைப் பின்பற்றி வருகின்றன

எமது அமைச்சுத்தான் சீர்திருத்தத்தை மேற்கொண்டது என்று கூறிவிடமுடியாது. சீர்திருத்தம் என்பது தமிழர்கள் பெரும்பாலாக வாழும் யாழ்ப்பாணத்திற் போராளிகளால் அறிமுகப்படுத்தப் பட்டுவிட்டது. சுவரொட்டிகள் சான்று பகர்கின்றன.

நாம் உத்தியோக பூர்வமாகச் சீர்திருத்தம் பற்றி அறிவித்தபோது யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு பண்டிதரிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. "சிவபெருமானுடைய படைப்புக்கள் இந்த எழுத்துக்

... 8 ஆம் பக்கம் பார்க்க

பேட்டி கண்டவர்

வி.என்.எஸ்.உதயசந்திரன்

இந்து சமய இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி.தேவராஜ் அவர்கள் சொல்வதைச் செயலில் காட்டுபவர். தன்னல் செய்ய முடியுமானல் மட்டுமே உறுதி மொழி வழங்குபவர். அவர் இன்னும் அரசியல் வாதியாக மாறவில்லை. நான் தொல்பொருள்களைச் சேகரிக்கும் 'கலைஞானி' என்ற ஒரு மனிதரைப்பற்றி அமைச்சரிடம் குறிப்பிட்டேன் இவர் பல பழமையான பொருட்களை பேணிக் காத்து வருகின்றார். இவரிடம் பல எமக்குத் தெரியாத விஷயங்கள் இருக்கின்றன இவரின் சேகரிப்புகளை இளைய தலைமுறை அறியவும், ஆய்வுக்காகவும் இவரிடம் இருக்கின்ற தொல்பொருள்கள் பாதுகாக்கப்பட வேண்டும் நாம் அறியாத விஷயங்கள் பலவற்றை இவரிடம் இருந்து இவர் இருக்கும் போதே பெற்று பாதுகாக்கப்பட வேண்டும். உங்கள் யாழ் விஜயத்தின் போது இந்ததிறமைமிகு மனிதரைப் பற்றியும் கவனத்திற்கு எடுத்து அவரது தொல் பொருட்கள் ஆய்வுக்காகப் பயன்பட உதவ வேண்டும் என கேட்டேன் "அதற்கு உதவுவதாக அமைச்சர் உறுதியளித்தார்.

**செய்தி...**

இந்து சமயஇந்துகலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் அவர்கள் எதிர்வரும் 25ம் திகதி வடபகுதிக்கு விஜயம் செய்கின்ருர் 30-ம் திகதி வரை இவர் வடபகுதியில் தங்கி இருப்பார் இவரது விஜயத்திற்கான ஏற்பாடுகளை அமைச்சின் நிகழ்ச்சித்திட்ட அலுவலா திரு. என். சோமகாந்தன் மேற்கொண்டு வருகினர்.

## அரசாங்க ஊழியர்கள்
# மோட்டார் சைக்கிள் சவாரி செய்ய 7500மேலதிக கடனுகக் கிடைக்கும்

அரசாங்கச் சேவையிலுள்ள ஊழியர்கள் சைக்கிள்களையும், மோட்டார் சைக்கிள்களையும் வாங்குவதற்காக இதுவரை வழங்கப்பட்டுவந்த 15,000 ரூபாக் கடன் தொகை, இனி 7,500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, மொத்தம் 22,500 ரூபாவாக வழங்கப்படவுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரவுள்ள இந்த அதிகரிக்கப்பட்ட கடன் தொகையை அரசவூழியர்கள் எல்லோரும் பெறலாம்.

இளைப்பாற்றுச் சம்பளத்தை நிரந்தரமாகப் பெறும் அரச ஊழியர்களுக்கு; 5 வருட காலச் சேவையிலுள்ள மற்றுமொரு அரச ஊழியர் பிணையாக நின்றும்; தற்காலிக அரச ஊழியர்களுக்குப் பத்து ஆண்டுகாலச் சேவையுடைய ஊழியர் பிணையாக நின்றும், இவ்வதிகரிக்கப்பட்ட கடனைப் பெற்றுக் கொள்ளலாம்

## அலைகடல் நடுவே கைகொடுத்த காரிகை

கடலில் மீன்பிடிப்பதற்குப் படகில் சென்று கொண்டிருந்த ஒருமீனவர் கடலில் தவறி வீழ்ந்து தத்தளித்து உயிருக்கு மன்றுடிய வேளை அதனைக் கண்ணுற்ற வெளிநாட்டு உல்லாசப் பெண் பயணி ஒருத்தி அவரைக் காப்பாற்றிக் கரைசேர்த்தார். இச்சம்பவம் தென்னிலங்கையைச் சேர்ந்த தொடத்துவவில் நிகழ்ந்துள்ளது.

## தும்பு உற்பத்தி நிலையத்தை மீண்டும் இயங்கவைக்க முயற்சி

மன்னார் மாவட்டத்தில் பனந்தும்பு உற்பத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பனை அபிவிருத்திச்சபை விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டத்திற்கென மன்னார் மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து விசேட நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் சேதமடைந்துள்ள துமபு உற்பத்தி நிலையத்தை திருத்துவதற்கென மன்னார் மாவட்டப் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து ரூபா இருபத்தேழாயிரம் மன்னார் மாவட்ட அரச அதிபரினால் ஒதுக்கப்பட்டுள்ளது இதற்கெனத் தும்பு விஸ்தரிப்பு நடவடிக்கைகளை கவனிப்பதற்கென விசேட உத்தியோகத்தர்கள் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (33)

## மருந்து விநியோகம்

சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், இளவெட்டி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு இவ்வருட முதலாம் காலாண்டுக்கான மருந்து வகைகள் யாழ் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினரால் நேரடியாக லொறி மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இவ் வைத்திய சாலைகளில் நீண்ட நாட்களாக நிலவிய மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது (13)

## காகித ஆலை ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு

வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்களுக்கு 50% ஊக்குவிப்பு கொடுப்பனவு ஏப்ரல், மே, யூன், மாத சம்பளத்துடன் வழங்கப்படும். ஆறு மாதங்களுக்கு முரிய ஊக்குவிப்பு கொடுப்பனவு மேற்படி மூன்று மாதங்களில் வழங்கப் படவிருக்கிறது.

இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கு 90 லட்சம் ரூபா தேவை எனவும் இது காகித ஆலையின் லாபப் பணத்திலேயே வழங்கப்படுகிறது எனவும் காகித ஆலை உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (5)

## கிளிநொச்சியில் முதன்முதலாக
# உருத்திரபுரப் பகுதியில் சென் ஜோண் அம்புலன்ஸ்

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும், உருத்திரபுரம் மத்திய மகாவித்தியாலயமும் இணைந்து முதன் முதலாக சென் ஜோண் அம்புலன்ஸ் முதலுதவிப் பயிற்சி வகுப்பை ஆரம்பித்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டப் படைப் பிரிவின் பொறுப்பதிகாரியான எஸ். வீ சிறிதரன் உருத்திரபுர விளையாட்டுக் கழக செயலாளரான யே. நேசயேசுதாசன் ஆகியோரின் முயற்சியினாலே இப்பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சிவகுப்பில் 180க்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். இவ்வகுப்புக்கள் உருத்திரபுரம் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றன. (03)

## வவுனியாவில் உண்ணாவிரதம்

வவுனியா மாவட்டச் சிற்றூரவைகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதம் வவுனியா புதிய பஸ்நிலையத்திற்கருகில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

## கருத்தரங்கிலும் சிங்கள ஆக்கிரமிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள ஆரம்ப வகுப்புக்கான 1—5 ஆண்டு வரை உடற் கல்வி பாடத்திட்ட அமைப்பு சம்பந்தமான ஆலோசனைக் கருத்தரங்கு கடந்த வாரம் தேசியக் கல்வி நிறுவனத்தினால் மஹரகமவில் நடத்தப்பட்டது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருந்து அக் கருத்தரங்கிற்கு மூன்று தமிழ் ஆசிரிய ஆலோசகர்கள் அழைக்கப்பட்டு கலந்துகொண்டனர். யாழ்ப்பாண மாவட்டம் திரு. அருணகிரிராசா, கிளிநொச்சி மாவட்டம் திரு. க. பாலசெங்காதரன், வவுனியா மாவட்டம் திரு. த. தெய்வேந்திரம் ஆகியோர் பங்குகொண்டனர். கருத்தரங்கு சிங்கள மொழியிலேயே நடத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. (35)

## 1979 முதல் 1988 வரை
# புகையிரதப் பகுதிக்கு 711 கோடி ரூபா நஷ்டம்

ஜே.வி.பியினரின் நாசகார வேலைகளினாலும் வட பகுதி ரயில் சேவைகள் கடந்த காலங்களில் பாதிப்படைந்ததனாலும் ரயில்வேத் திணைக்களத்திற்குப் பாரிய நஷ்டமேற்பட்டுள்ளது.

1979—ம் ஆண்டிலிருந்து 1988—ம் ஆண்டு வரை ரயில்வேத் திணைக்களத்திற்கு 711 கோடி ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

ரயில்வேத் திணைக்களத்தின் கணக்காய்வாளரிகளின் தின் புதிய அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது ரயில்வேத் திணைக்களத்தின் சேவைகள் தடங்கலின்றி நடைபெற்று வருவதனால் வருமானம் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வடபகுதி யுவதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திறுவனமும்பனை அபிவிருத்திச்சபையும் இணைந்து நடாத்தும் பயிற்சித் திட்டங்களின் கீழ்ப்பயிற்சி பெற்றுவரும் ஐம்பது யுவதிகளில் இலங்கையில் பயிற்சியை நிறைவு செய்த இருபத்திரண்டு பேர் உழைக்கும் மகளிர் தலைமைத்தத்துவ பயிற்சிநெறியைக்கற்பதற்காக இம்மாதம் முதலாம் திகதி இந்தியா சென்றடைந்துள்ளனர்.

இம்மாதம் இருபத்தி நான்காம் திகதிவரை இந்தியாவில் உள்ள பல்வேறு மகளிர் நிறுவனங்களில் பயிற்சி பெறும் இவர்கள் இம்மாதம் இறுதியில் நாடு திரும்பவிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இதைத் தொடர்ந்து இப்பயிற்சி பெறுவதற்கான இரண்டாவது குழு இந்தியா செல்லவிருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதி உதவியுடன் பயிற்சி பெற்று வரும் இவர்கள் பனை அபிவிருத்திச்சபையின் கட்டுப்பாட்டில் இயங்கும் உழைக்கும் மகளிர் குழுக்களைவழிநடாத்தபயன்படுத்தப்படுவர் (33)

# விளையாட்டுச் செய்திகள்

## 'முரசோலி' வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி

(விளையாட்டுத்துறை நிருபர்)

'முரசொலி' ஸ்தாபனத்தின் அனுசரணையுடன், யாழ் உதவி அரச அதிபர் பிரிவினால் நடத்தப்படவுள்ள உதைப்பந்தாட்டப் போட்டி இன்று 9-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும் ஆரம்ப நாளான இன்று பி. ப. 3 மணிக்கு குருநகர் விளையாட்டுக் கழக (A) அணியை எதிர்த்து சென் றூக் விளையாட்டுக் கழக அணியும், பி. ப. 4 மணிக்கு சென் நிக்கிளஸ் விளையாட்டுக் கழக (B) அணியை எதிர்த்து திருவள்ளுவர் விளையாட்டுக் கழக அணியும், சென் அந்தனீஸ் விளையாட்டுக் கழக (B) அணியை எதிர்த்து குருநகர் விளையாட்டுக் கழக (C) அணியும் மோதவுள்ளன. இச்சுற்றுப் போட்டியில் வெற்றி' பெறும், அணிகட்கு, பெறுமதி மிக்க பரிசில்களை 'முரசொலி ஸ்தாபனத்தார் வழங்க உள்ளார்கள் (16)

## சிவன் அணி வெற்றி

(விளையாட்டுத்துறை நிருபர்)

71வது தேசிய திருநாளை முன்னிட்டு அரியாலை சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் கரப்பந்தாட்டப் போட்டியின் ஓர் அங்கமாகக் கடந்த 6-ம் திகதி, திருநெல்வேலி சிவன் விளையாட்டுக் கழகத்திற்கும், கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் 15:5,-15:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டு நேர் செற்றுகளால் திருநெல்வேலி சிவன் விளையாட்டுக்கழக அணி வெகு இலகுவாக வெற்றியீட்டியது. கைதடி விளையாட்டுக்கழக அணியினர் முதலாவது செற்றிலும் பார்க்க இரண்டாவது செற்றில் ஓர் அளவு திறம்பட ஆடியபோதிலும் பலம்வாய்ந்த சிவன் அணியினர்க்கு ஈடு கொடுக்க முடியாமற் போய்விட்டது. சிவன் அணியினர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற-பல்வேறு கரப்பந்தாட்டப் போட்டிகளில், தொடர்ச்சியாக வெற்றி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிவன் அணியின் தலைவர் மணியம் வெகு சிறப்பாக ஆடி பாராட்டுதலைப் பெற்றூர். அரியாலை காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு.A.தவம் நடுவராகக் கடமையாற்றினூர். (16)

## யாழ். உதைபந்தாட்டப் போட்டி

யாழ் உதைபந்தாட்ட லீக்கினால் முதல் முறையாக நடத்தப்படும் 13 வயதிற்கு உட்பட்டவர்கள் மாத்திரம் கலந்து கொள்ளும் உதைபந்தாட்டப் போட்டி கடந்த 6-ஆம் திகதி சென் அந்தனீஸ் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது. முதற் போட்டியில் அரியாலை வி க. அணியை எதிர்த்து மோதிய கலைவாணி விளையாட்டுக்கழக அணி ஒன்றிற்குப் பூச்சியம் என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது ஆட்ட நேரம் முடிவடையும்வரை இரு அணிகளும் ஒரு கோலைத்தானும் போடாததினால் மேலதிகமாகப் 10 நிமிடங்கள் கொடுக்கப் பட்டன. முதல் 5 நிமிடத்திலேயே கலைவாணி அணியினர் நன்றாக ஆடி ஒரு கோலைப்போட்டு வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர். சென் அந்தனீஸ் அணி [A] பிரிவிற்கும், அல்லைப்பிட்டி விளையாட்டுக்கழக அணிக்குமிடையில் நடைபெற்ற 2 வது போட்டியில் சென் அந்தனீஸ் கடும் போட்டியின் பின் ஒன்றிற்குப் பூச்சியம் என்ற கோல்கணக்கில் வென்றது. நடுவராகத் தவசி கருணாகரனும்-துணை நடுவர்களாக கப்ரின் DAM குணசிங்கம் G.ஆனந்தன் ஆகியோரும் கடமையாற்றினூர்கள். [16]

## ஷார்ஜா கிரிக்கெட் போட்டி

ஏப்ரல் மாதம் 25-ம் திகதி, ஷார்ஜாவில், சன்யோ - ஒஸ்ரலேசிய வெற்றிக்கிண்ணத்திற்கான, 50 ஓவர்கட்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் கிரிக்கெட்போட்டி ஆரம்பமாகவுள்ளது. இச்சுற்றுப் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஆஸ்ரேலியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ் ஆகிய ஆறு நாடுகள் பங்குபற்றுகின்றன இப்போட்டி ஷார்ஜாவில் நடைபெறும். 50 வது சர்வதேச ஒருநாள் போட்டியாகவும் அமைவதால் இதில் வெற்றிபெறும் அணிக்கு ஒருலட்சம் பவுன்ஸ் பரிசாக வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது மேலும் கிரிக்கட வீரர்களை கௌரவிக்கும் முகமாக, ஆஸ்திரேலிய வீரர் அலன் போடர், இந்திய வீரர்கள் குலாம் அகமட், மதன்லால், இலங்கை வீரர் டுலிப் மெண்டிஸ், பாகிஸ்தான் வீரர்கள் இம்தியர்ஸ் அகமட், சலீம்மலிக் ஆகியோருக்கு தலா 3,500 பவுன்ஸ் பணமுடிச்சுகள் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளன. 25-ம் திகதி ஆரம்பமாகும்போட்டிகளின் விபரம்: 25-ம் திகதி இலங்கைஎதிர் இந்தியா, 26 ஆம் திகதி ஆஸ்திரேலியாஎதிர்நியூஸிலாந்து, 27 ஆம் திகதி பாகிஸ்தான் எதிர் இந்தியா, 28-ம் திகதி பங்களாதேஷ் எதிர்நியூஸிலாந்து 29-ம் திகதிபாக்கிஸ்தான் எதிர் இலங்கை 30-ம் திகதி ஆஸ்திரேலியா எதிர் பங்களாதேஸ், மே 1-ம்திகதி அரை இறுதி ஆட்டமும் 2-ம் திகதி இரண்டாவது அரையிறுதி ஆட்டமும் 4-ம் திகதி இறுதிஆட்டமும், நடைபெறும் இப்போட்டிகளை நேரடிஒலிபரப்புச்செய்யும் பொறுப்பை சன்நியோ நிறுவனம்தர் சனும்ஏற்றுள்ளதுஅதேவேளை இந்தியாவின் தூர நேரடிஒலிபரப்பை மேற்கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (16)

## மரதன் ஓட்டப் போட்டி

கல்வியங்காடு ஞானபாகஸ்ரோதய சங்க, விளையாட்டுக் கழகவருடாந்த மெய்வல்லுநர் போட்டியைமுன்னிட்டு வருடப் பிறப்புத் தினமான எதிர்வரும் 14-ம் திகதி சனிக்கிழமை காலை ஆறுகணியாளவில் விசேட நிகழ்ச்சியாக ஆண்களுக்கான மரதனேட்டமும், ஆண்கள் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் நடைபெறவுள்ளன. இப் போட்டியில் உள்ளூர் அங்கத்தவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். மேற்படி வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர் வரும் 22-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும். (25)

## முரசொலிக்கு வந்த கடிதம்

# மாகாண உள்ளூராட்சிசேவையில் ஏன் இந்தத் தாமதம்?

ஆசிரியர்
முரசொலி

1948-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை உள்ளூராட்சிச் சேவையின் தனித்துவம், மகத்துவம் மிகச் சிறப்பாகப் பேணப்பட்டு வந்துள்ளது. ஆனால் அத்தன்மை இன்று மாகாண பகிரங்க சேவையின்கீழ் அழிந்துபோகும் தறுவாயில் உள்ளது எனவே, கைவிடப்படாது பேணப்பட்டு, காக்கப்படவேண்டியது மாகாண சபை உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களத்தின் தலையாய கடமையாகும்.

வட - கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சிச் சேவைத் திணைக்களத்தால் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சேவையிலுள்ள அதி சிறப்பு வகுப்பிற்கு சிறப்புத் திறமைப் பதவி உயர்வுகளுக்கான விண்ணப்பங்கள் சென்ற ஆண்டு கோரப்பட்டன ஆனால் இன்றுவரை அதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படாது இருப்பது கவலைக்குரிய விடயமாகும். உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு நியமனங்களை உரியகாலத்தில் வழங்குவதற்கு நேர்முகப் பரீட்சையை மிக விரைவில் நடாத்துமாறு மிக பணிவாகக் கேட்டுக் கொள்ளுகின்றோம். அத்தோடு புதிதாக அமைக்கப்படும் மாகாண பகிரங்க சேவையின்கீழ் எமது சேவை நலன்கள் பாதிக்கப்படக்கூடுமாகையால் மேலும் காலம் தாழ்த்தாது பதவி உயர்வுகளை மிக விரைவில் வழங்குவது எமது சேவைக்கு நன்மை பயக்கத்தக்கதாகும். சேவையிலிருந்து இளைப்பாறு முன்பாவது எமக்கு பதவி உயர்வு கிடைக்காதா?

மாநகர சபை, உள்ளூராட்சிச் சேவை எழுதுவினைஞர்கள்
யாழ்ப்பாணம்.

# பலாலி-திருச்சி விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

ஆசிரியர்
முரசொலி

காங்கேசன்துறை (பலாலி) மார்க்கமாக திருச்சி அல்லது மதுரைக்கு ஒரு விமானசேவை நடத்தினால் நமது மக்கள் தென் இந்தியாவுக்குத் திருவிழாக்களுக்குச் செல்ல மிகுந்த உதவியாக இருக்கும். மேலும் இதனால் நமது அரசுக்கும் அந்நியச் செலாவணி மூலம் வருவாய் கிட்டும். சுங்கப் பகுதிக்கும் தீர்வை வரியுண்டு. நமது அரசு மக்களின் நன்மை கருதி இந்த விமான சேவைக்கு ஆவன செய்ய வேண்டும். முன்னர் பலாலியிலிருந்து திருச்சி விமான சேவை நடாத்தப்பட்டு வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம். S துரைசாமிஐயர்

## வறிய மாணவருக்கு முன்னுரிமை

# அவுஸ்திரேலிய புலமைப்பரிசு இப்போது விண்ணப்பிக்கலாம்

அவுஸ்திரேலியாவில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இலங்கை மாணவர்க்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பம் தற்பொழுது கோரப்பட்டுள்ளது

விண்ணப்பதாரி 1991 ஜனவரி முதலாம் திகதி 18வயதையுடையவராக இருப்பதுடன் அதே காலப் பகுதியில் தமது இடைநிலைக் கல்வியை பூர்த்தி செய்தவருமாய் இருத்தல் வேண்டும்.

சமத்துவ புலமைப் பரிசிலுக்கு 1986 அல்லது 1989 ஆம் ஆண்டு ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் குறைந்தது நான்கு 'பி' சித்திகளை அல்லது மொத்தமாக 260 புள்ளிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

திறமைக்கான புலமை பரிசிலுக்கு விண்ணப்பதாரிகள் 1986 அல்லது 1989 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் குறைந்தது இரண்டு 'ஏ' சித்திகளையும் இரண்டு 'பி' சித்திகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் படிப்பை மேற்கொள்வதற்கான நிதி வசதியற்ற குடும்பம் என்பதை நிரூபிப்பதோடு ஜனசவிய, உணவு முத்திரை மற்றும் இதுபோன்ற அமைப்புக்களில் அடங்கியுள்ளவர்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருக்குமாயின் அத்தகைய விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

புலமைப்பரிசிலில் அரைவாசி இடம் பெண்களுக்கு ஒதுக்கப்படும்.

இதற்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு-7 இல் உள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

## போக்குவரத்துச் சபையில்

# 6000 ஊழியர்கள் இளைப்பாற விண்ணப்பம்; நடாத்துனர், சாரதிகள் பதவிகளுக்கு வெற்றிடம்

இலங்கைப் போக்குவரத்துச் சபைகளிலிருந்து ஏறத்தாழ 6000 பஸ் ஊழியர்கள் சேவை இளைப்பாறுதல் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இந்த இளைப்பாற விரும்பும் ஊழியர்கள் சம்பந்தப்பட்ட டிப்போக்களுக்குத் தமது விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வருகின்றனர்.

அரைவாசிக்கும் அதிகமான அளவில் சாரதிகளையும், நடத்துநர்களையும் உள்ளடக்கிய இவ்விளைப்பாறும் ஊழியர்களுக்காக சேவை இளைப்பாற்று விண்ணப்படிவங்கள் ஒப்படைக்கப்படும் இறுதி நாள் மார்ச் 31 ம் திகதியாகும்.

மேற்படி தகவல்களை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பலர் இளைப்பாறுவதற்கு விண்ணப்பித்துள்ளதனால் நடாத்துனர், சாரதிகள் பதவிகளுக்கு பற்றாக்குறை ஏற்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

# பற்றை ஒன்றிற்கு அடித்தால் அமைச்சர் வெளியே வருவார்

சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற மந்திரிமார் மாற்றமும் புதனன்று இடம்பெற்ற தொடர் ஆரம்பமும் வியாழனன்று பாராளுமன்றக் கூட்டத்தின்போது பலமாக எதிரொலித்தன.

அரசாங்கத் தரப்பில் 77 பேர் அமைச்சர் பதவி பெற்றுள்ளனர். 48 பேர் சாதாரண எம். பிக்களாக உள்ளனர். இவர்களுக்கும் மந்திரி பதவி கிடைக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை. என திரு. ரிச்சட் பத்திரண கூறியபோது

அப்படி நடந்தால் எல்லோரும் மன்னர்கள் ஆகிவிடுவார்கள் என குரல் ஒன்று எதிர்க்கட்சியின் தரப்பில் எழுந்தது.

இந்தியாவில் 25 அமைச்சர்களே உள்ளனர்' சிமாட்டி தட்சர் அமைச்சரவையிலும் குறைவாகவே உள்ளனர். ஆனால் சிறிய நாடான இலங்கையிலோ நிலைமை மாறாக உள்ளது என திரு- பத்திரண தன் பேச்சைத் தொடர்ந்த போது வரி குறைப்பு பற்றி பேசும்படி பணிக்கப்பட்டது.

வரி குறைப்பு, அதிகரிப்பு போல மந்திரிமார் கூட்டல் குறைத்தல் பற்றியும் பேச விரும்புகிறேன் என நியாயப்படுத்திய திரு. பத்திரண, இந்நாட்டில் மொத்தம் 117 அமைச்சர்கள் இருப்பதாகத் தெரிவித்தார்.

77 அமைச்சர்களுடன் மாகாண சபைகளில் உள்ள 40 அமைச்சர்களையும் அவர் சேர்த்துக்கொண்டே 117 என்ற எண்ணிக்கையை வெளியிட்டார்

இன்னும் சில நாட்களில் மரம் ஒன்றுக்குக் கல் எறிந்தால் ஓர் அமைச்சர் கீழே விழுவார் பற்றை ஒன்றிற்கு அடித்தாலும் ஓர் அமைச்சர் வெளியே வருவார், எனவும் பத்திரண குறிப்பிட்டார்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

### காரைநகரில்

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் காரைநகர் வடக்கு உப அலுவலகப் புதிய கட்டடத்திறப்பு விழா இன்று நடைபெறும். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலால புதிய கட்டடத்தைத் திறந்து வைப்பார். (45)

### நாவலர் மண்டபத்தில்

யாழ்-மாநகர வீதி ஒழுங்குகள் தொடர்பாகக் கலந்துரையாடவேண்டியிருப்பதால் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் சென்.ஜோன் அம்புலன்ஸ் பிரிவின் சகல அங்கத்தவரையும் மற்றும் இப்பணியில் ஈடுபட்டுள்ள மன்ற ஊழியர்களையும் இன்று திங்கட்கிழமை பி.ப. 2 30மணிக்கு நாவலர் மண்டபத்திற்குச் சமூகமளிக்கும்படி யாழ். மாநகர ஆணையாளர் கேட்டுள்ளார்.

### இணுவிலில்

இணுவில்-மஞ்சத்தடி அருள்மிகு அருணகிரிநாதர் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மஹோற்சவ இன்றைய நிகழ்ச்சியாக மாலை ஆறு மணிக்கு சங்கீதபூஷணம் பண்ணிசைச் செல்வர் வி. சிவஞானசேகரின் இசைக்கச்சேரி நடைபெறும்.

### சண்டிலிப்பாயில்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை கட்டடத் திறப்புவிழா இன்று திங்கட் கிழமையன்று நடைபெறவுள்ளது. யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைப்பார். (13)

### பண்டத்தரிப்பில்

பண்டத்தரிப்புச் கோட்டக் கல்வி அலுவலக பிரிவிலுள்ள பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த்தின போட்டிகள் இன்று திங்கட்கிழமையன்று பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (13)

## 1987 ஜூலையில் ராஜீவைத் தாக்கிய

# றேகண விடுதலை தொடர்பாக தமிழக சட்டசபையில் குழப்பம்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியைத் தாக்கிய கடற்படை வீரர் றேகண விஜேமுனி விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக நேற்று முன்தினம் தமிழக சட்டப் பேரவையில் பெரும் குழப்பம் நிலவியது.

இவர் விடுதலை செய்யப்பட்டது தொடர்பாக கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற இந்திரா காங்கிரஸ், அ. தி. மு. க, உறுப்பினர்கள் முயற்சித்த போது சபாநாயகர் தமிழ் குடிமகன் அனுமதி தரமறுத்து விட்டார். இதனை தொடர்ந்து பெரும் கூச்சலும் குழப்பமும் சட்டப்பேரவையில் நிலவியது.

பின்னர் இரு கட்சியினரும் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதேவேளை றேகண விஜேமுனி விடுதலை செய்யப்பட்டதைக் கண்டித்து இந்திரா காங்கிரஸ் தூதுக் குழு ஒன்று இலங்கை தூதரைச் சந்தித்து தமது ஆட்சேபனையை தெரிவித்துள்ளனர். இவரை விடுதலை செய்தது இந்தியாவை அவமதித்தது போலாகும் எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்

## நூற்றாண்டு விழா

எதிர்வரும் யூன் மாதம், நெளுங்குளம் கலைமகள் வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழா மூன்றுநாள் விழாவாக நடைபெறவுள்ளது.

## சுவையான செய்திகள்

# மறுமணம் விரும்பும்விதவை

வட ஆபிரிக்காவில்உள்ள நிஜெல என்னும் நாட்டில் ஒரு விதவை மறுமணம் செய்ய விரும்புமிடத்து ஒருபுதுமையான விளம்பரத்தை செய்கின்றார்கள். மறுமணம் விரும்பும் விதவை தனது பிரியமான கூழ்ப்பானத்தைத் தானே தயாரித்து ஒரு பாத்திரத்தில் ஊற்றி; அப்பாத்திரத்தை தன் தலையில் கொண்டு வீதியில் உலாவுவாள். அந்த கூழ் உள்ள பாத்திரத்தில் இரண்டு கரண்டிகள் வைக்கப் பட்டிருக்கும். எந்த ஆண்மகனும் அந்த கூழை சுவைப்பதன் மூலம் அந்த விதவையின் சமையற்கலை அறிந்து மணம் புரியலாம். அதேவேளை அந்த விதவையின் சமையல்க்கலை தகுதியற்றதாயின் அந்த விதவையை மணம் புரியாமல் விலகவும் இடமுண்டு.

# கைக்குட்டை எப்படி வந்தது?

இங்கிலாந்தின் அரசன் றிச்சாட் II(1367-1400) பிரான்சில் பிறந்து, 7 வயதுடைய பிராசின் இளவரசியை மணந்தான். இவரே கைக்குட்டையை அறிமுகப்படுத்தினர். இவ்வரசனின் வீட்டுப் பதிவுப்புத்தகங்களின் படி இவ்வரசன் தனது மூக்கைத் துடைப்பதற்காகவே சிறுசிறு துண்டுகளைப் உபயோகித்தான் அவையே பின்னர் கைக்குட்டை என அழைக்கப்படுகின்றன.

# மூன்றாவது மணமகள்....

புருக்களைத் திருமணம் செய்து கொள்ளும் இந்துக்கள் இந்திய உபகண்டத்தில் வாழ்கின்றார்கள் பழமைக்குக் கட்டுப்பட்டுள்ள பெங்காளி இனத்தவரிடையே ஒரு சக்திவாய்ந்த நம்பிக்கை, "3" ஒரு துரதிர்ஷ்டமான எண் என்பது. இதனால் ஒரு பெங்காளி இன ஆண் மூன்றாவது முறையாகத் திருமணம் செய்து கொள்ளும் பெண் நீண்ட ஆயுடகாலத்தைக் கொண்டிருக்கமாட்டாள் என நம்புகிறார்கள் எனவே முன்னர் இருமுறை மணம் புரிந்த பெங்காளி இன மணமகன் தனது மூன்றாவது மணமகளாக ஒரு பெண் புருவை மணம் புரிவான். இதன் பின்பும் அவன் விரும்பும் பட்சத்தில் ஒரு பெண்ணை மணம்புரிவான். இது அவனுடைய நான்காவது மனைவியாக அமைவதால் சுகமாக வாழ்வான் என நம்புகின்றனர்.

# உலகவீராங்கனையாக ஆண்

உலகின் சிறந்த பில்லியட் வீராங்கனையாகச் செல்வி பிரான்சிஸ் அன்டெர்சன் விளங்கினாள். 25 வருடங்களின் பின் ஓர் உண்மை வெளியானது திரு ஒரே. எப் அன்டெர்சன் என்ற கன்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்தவரே பெண்ணாக மாறுவேடம் தரித்து செல்வி பிரான்சிஸ் அன்டெர்சன் என நடமாடினார் என்று.

# ரமழான் சிந்தனைகள்

## பொறுப்புக்களைச்சரிவரச்செயற்படுத்துங்கள்

"எந்த ஒரு மனிதன், ஒரு குருவியைக்கூட அதன் கடமையைப் பேணுமல் அறுப்பானேயானுல், அதைப் பற்றியும் மறுமை நாளில் அவனிடம் விசாரணை செய்யப்படும்." "அதன் கடமை பேணுவதென்ருல் எப்படி?" என ஸஹாபாக்கள் (தோழர்கள்) வினவ, "அதை அறுத்த பின்னர் அதைப் புசித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி அறுத்தோம், வீசினேம்! என்று இருக்கக்கூடாது" என்பதாக அருமை நபி(ஸல்) அவர்கள் கூறினுர்கள்.

"உங்களின் பணியாள் உங்களுக்கு ஏதேனும் ஒரு பொருளைச் சமைத்துக் கொண்டு வந்தால், அவன் அதன் உஷ்ணத்தையும், புகையின் சிரமததையும் அனுபவித்திருபபதால், அவனை நீங்கள் உண்ணும் உணவில சேர்த்துக் கொள்ளுங்கள். அவனைச் சோத்துக் கொள்ளும் அளவுக்கு உணவு பற்ருவிடில். அதில் சிறிதளவாவது அவனுக்கு எடுத்துக் கொடுத்து விடுங்கள்" என நபி(ஸல) அவர்கள் அடித்துக் கூறினுர்கள்.

"உங்களுக்குக் கீழ் உள்ளவர்களுடன் நல்ல முறையில் நடப்பது புனித செயல்களில் உள்ளதாகும். அவர்களோடு துர்க்குணத்துடன் பழகுவதானது மூதேவித்தனமான செயல்களில் உள்ளதாகும்" என்பது பெருமானுர் (ஸல்) அவர்களின் பொன்மொழியாகும்.

# இன்று நாள் எப்படி?

மேடம்: தொழில் மாற்றம், பெரியோரி பகை, வாகனக் கஷ்டம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம், புதுத்தொழில்.

இடபம்: இராஜமரியாதை, பணவரவு, உயர்பதவி, மனையிற் சுபகாரியம், தேடியவர் வருகை.

மிதுனம்: மாதாவழியுதவி, வாகனசுகம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் இலாபம்.

கடகம்: தேடியவர் வருகை, பிதாவழிச்சுகம், உத்தியோக உயர்வு, தூரத்துச்செய்தியால் நன்மை.

சிங்கம்: பணவரவு, வாகன சுகம், வணிகர்கள் இலாபம், இலட்சுமி கடாட்சம், தேடியவர் வருகை.

கன்னி: உடல்ரோகம், பெண்களாற் கவலை, பொருட்செலவு, வாகன நஷ்டம், தடைப்பட்ட பணவரவு.

துலாம்: திருடர் பயம், வெளியூர் போனவர் வருகை, இளைய சகோதரவழி நன்மை, புதுத்தொழில்.

விருச்சிகம்: தேடியவர் வருகை, பணவரவு, வாகன மாற்றம், சுகஜீவியம், புதுத்தொழில்.

தனுசு: புகழ் தேடிவரும், கல்வியாற் தொழில், காதலர் மகிழ்ச்சி, விவாக நிச்சயம்.

மகரம்: வாகன இலாபம், வணிகர்கள் கடற்தொழில் செய்வோர் லாபம், இயந்திரத்தொழில் மூலம் நன்மை.

கும்பம்: சுகஜீவியம், பணவரவு, மாமன் வழியுதவி, இளைய சகோதர வழியுதவி, புதுத்தொழில்.

மீனம்: புண்ணிய வழிபாடு, வாகனநஷ்டம், விவாக நிச்சயம், தூரதேசம் போனவர் வருகை, மாமன் வழியுதவி.

யாழ். சோதிடர்
அ. அரியநாயகம்


## அறிவித்தல்

### கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குள் வீடமைப்பு நகர சீர்திருத்த, கட்டளைச் சட்டமும், அது தொடர்பான உப விதிகள் சுற்று நிருபங்கள் ஆகியன 16-06-1988-ம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

எனவே அப்பிரதேச எல்லைக்குள் இருக்கும் முரசுமோட்டை உப பணிமனை கிளிநொச்சி உப பணிமனை ஆகிய அலுவலக எல்லைக்குள் புதிய கட்டிடங்கள் அமைத்தல், பழைய கட்டிடங்களை திருத்தல், எல்லைச் சுவர்கள் அமைத்தல், புதிய பாதைகள் திறத்தல் என்பவற்றை செய்யுமிடத்து பிரதேச சபையின் முன் அங்கீகாரம் பெற்றுச் செய்தல் வேண்டும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை இப்பிரதேச தலைமைப் பணியனையில் (கிளிநொச்சி நகர மண்டபம்) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. வேலுப்பிள்ளை
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை
கிளிநொச்சி.

கரைச்சிப் பிரதேச சபை,
தலைமைப் பணிமனை,
கிளிநொச்சி.
5. 4. 1990

04078


சுடுபவருக்கு 4400 டொலர் சன்மானம்

# போதைவஸ்துக் கும்பல்களால் பொலிஸார் சுட்டுக்கொலை

கொலம்பியாவிலுள்ள போதைப்பொருள் கடத்தல் கும்பல்களினுல் பொலிஸார் சுட்டுக்கொல்லப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

ஒரு பொலிஸாரைக் கொல்லும் நபருக்கு 4400 டொலர் சன்மானம் கடத்தல் தலைவர்களிலொருவரான பெப்லோ எஸ்கபர் என்பவரால் வழங்கப்பட்டு வருகின்றது. இதையடுத்து சில தினங்களில் சுமார் ஏழுக்கும் மேற்பட்ட பொலிஸார் சுட்டுக்கொல்லப்பட்டதோடு, ஆறுக்கும் அதிகமானேர் காயமுற்றனர்.

போதைப்பொருள் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள் விசாரணைக்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்படுவதை கடத்தல்காரர்கள் எதிர்த்து வருகின்றனர்.

விபரல் கட்சியின் சிரேஷ்ட செனட்டரான பெடரிகோ என்பவரும் கடத்தல் கும்பலால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். கொலம்பியா நகரில் பொலிஸாரும், துருப்புகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

# காஷ்மீர் பிரச்சினை பாரத உள்நாட்டு விடயம்

## ரஷ்யா கருத்து

"காஷ்மீர் பிரச்சினை முழுக்க, முழுக்க பாரதத்தின் உள்நாட்டு விடயம் அது தொடர்பாக பாரதத்திற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே தோன்றியுள்ள பிரச்சினைத் தீர்வுக்கு சிம்லா உடன்பாடு மாத்திரமே அடிப்படையாக அமைய வேண்டும்" என்று சோவியத் யூனியன் கூறியுள்ளது.

புதுடில்லியில் பிரதமர் திரு வி.பி. சிங்கைச் சந்தித்துப் பேசிய சோவியத் பார்லிமென்டரி குழுத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

சோவியத் பார்லிமென்ட் உறுப்பினர் குழு ஒன்று தற்போது புதுடில்லி வந்துள்ளது.

இதேவேளை, காஷ்மீர் பிரச்சினையை மீண்டும் உருவாக்கும் கொள்கையை எதிர்ப்பதாகவும் பாரத பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஊடுருவலை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் ஐக்கிய அரபு எமிரேட் பாரதத்திடம் தெரிவித்துள்ளது.

## நேபாளப் பிரதமர் ராஜினுமா

# மன்னர் சில முக்கிய தீர்மானங்கள் எடுப்பார்?

நேபாளப் பிரதமர் தனைப் பதவியை ராஜினுமாச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

மன்னர் பிரேந்திரா விடம் அவர் தனது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளதாக காத்மண்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பலகட்சி ஆட்சி முறை முதலான கோக்கைகள்மீது இங்கு நிகழும் வன்முறையின் எதிரொலியாக மன்னர் சில முக்கிய முடிவுகளை மேற்கொள்வார் எனத் தெரிய வருகின்றது.

புதிய பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளதாகப் பிந்திக் கிடைத்த செய்தி தெரிவிக்கிறது.

# கனடா 'பிரஜைகள்' தாயகத்திற்கு சுற்றுலா

கடுமையாகச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகக் கூறிக்கொண்டு கனடாவிற்புகலிடம் தேடிய ஆயிரக்கணக்கான தமிழ்அகதிகள் தற்போது தமது தாயகங்களுக்கு நீண்ட சுற்றுலா மேற்கொள்ளவதாகத்தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் நிரந்தமாக வாழ அனுமதிக்கப்பட்ட பலர் தமது குடும்பங்களுடன் ஆறுமாதகால சுற்றுலாப்பயணங்களை மேற்கொண்டு தற்பொழுது தமது தாயகமான இலங்கையை வந்தடைந்துள்ளார்கள்.

கனடா கடந்த வருடம் 1500 இலங்கைத் தமிழருக்குப் புகலிடமளித்துள்ளது. தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களில் 48 பேரினது விண்ணப்பங்கள் மட்டுமே நிராகரிக்கப்பட்டதாகக் கனடாவில் இருந்து வெளிவரும் 'டொரன்டோ ஸ்ரார்' பத்திரிகை தெரிவித்துள்ளது.



★"என்ன பாக்கியக்கா கவலையா இருக்கிறியள் மகன் வெளிநாட்டில இருந்து இந்த மாதம் அனுப்பேலையோ?"

★'காசு அனுப்பினவன் நான் சந்தைக்கு போய் வர 'சாளி' ஒன்று வாங்கி அனுப்பச் சொல்லி கடிதம் போட்டன் அவன் அனுப்பேல்லை; அதுதான் யோசிக்கிறன்.

# பகலில் பஸ்நிலையம்; இரவில் மாட்டுத் தொழுவம்

கிளிநொச்சி நகரில் கட்டாக்காலி மாடுகள் நடமாட்டம் அதிகரித்து வருவதுடன் இரவில் பஸ் நிலையத்திலும் பிரதான வீதியிலும் கூட்டமாக அவை நிற்பதால் வாகன ஓட்டிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடைஞ்சலாக உள்ளது.

நகரின் பஸ் நிலையத்தில் பெருந்தொகையான மாடுகள் இரவில் நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. (35)

# பாடசாலை விடயங்களில் அதிபருக்கு அதிக அதிகாரம்

பாடசாலை விவகாரங்களில் முடிவுகளை எடுப்பதற்கு அதிபர்களுக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவுள்ளது.

வெளியார் தலையீடு, வற்புறுத்தல்களினுல் அதிபர்கள் சுயமாக இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனுலேயே அதிபர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க கல்வியமைச்சு முடிவு செய்துள்ளதாக உயர் கல்வியமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். பாடசாலைகளில் பிள்ளைகளை சேர்த்தல், விலக்கல் போன்ற நடவடிக்கையில் பிறர் தலையீடு இருக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தப்படவுள்ளது.

## புலிச்சின்னத்தின் புதிய இலக்கங்கள்

மட்டக்களப்பில் நடமாடும் விடுதலைப்புலிகளின் வாகனங்களுக்கு புதிதாக இலக்கமிடப்பட்டுள்ளது. புலிச் சின்னத்தின் பின்னணியில் நான்கு எண்களில் இப்புதிய இலக்கங்கள் இடப்பட்டுள்ளன.

# வல்லையில் ஸ்ரீலங்கா இராணுவம் பயன்படுத்திய வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

வல்லையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட வீடுகளைப் புனரமைக்க நிதி வழங்குமாறு வீட்டுச் சொந்தக்காரர்கள் ஸ்ரீலங்கா ஜனுதிபதி பிறேமதாஸவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்கள்.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாகச் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் வல்லை இராணுவ முகாமிற்கு அண்மையில் உள்ள பொது மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமிப்புச் செய்து இராணுமுகாம்களாக மாற்றிப் பயன்படுத்தி வந்தனர்.

அண்மையில் வல்லை இராணுவம் முகாம் அகற்றப்பட்டதைச் தொடர்ந்து தம் குடியிருப்புகளை நோக்கிச் சென்ற மக்கள் பெரும் ஏமாற்றத்துடனும் வேதனையுடனும் திரும்பியுள்ளார்கள். இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்த வீடுகள் பல தற்போது 'காணுமல்' போயுள்ளன. அங்கு கட்டடத்திற்குப் பதிலாக வெறும் நிலம் மட்டுமே காணப்படுகிறதாம்.

தமது வீடுகளைக் கட்டித் தருமாறும் அல்லது கட்டுவதற்கான நஷ்டஈட்டையாவது உடடியாகத் தந்துதவுமாறும் கோரி பாதிப்பிற்குள்ளான நூற்றி முப்பது மக்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றை தற்பொழுது ஜனதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்கள்.

# மட்டு. மாவட்ட நிவாரணக் கொடுப்பனவில் ஊழல்

மட்டு மாவட்டத்தில் ஒன்றிணைந்த புனர்வாழ்வு திட்டத்தின் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளன

இத்தகவலை புதிய மட்டு அரச அதிபர் ஆர். யோகநாதன் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற புனர்வாழ்வு புனரமைப்புத் திட்ட அமுல்படுத்தல் தொடர்பாக ஆராயப்பட்ட மாநாட்டில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அறுபத்தையாயிரம் குடும்பங்கள் மட்டுமே நிவாரணம் பெறத்தகுதியானவை ஆனால் நிவாரணம் தொடர்பாக தொண்ணூற்றி எட்டாயிரம் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பமாயின் குடும்பத்திற்கு ஒரு நிவாரணப்பத்திரமே வழங்க வேண்டும். ஆனால் விண்ணப்பித்த சில குடும்பங்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது, இதனால் உண்மையாகவே பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல நிர்க்கதியாகியுள்ளனர். (05)

## யாழ்ப்பாண பத்திரிகைகளுக்கு கொழும்பில் மவுசு

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு கொழும்பில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் யாழ்ப்பாண பத்திரிகையாளர்களை சந்தித்து பேட்டியளித்த காரணத்தினாலே தமிழ்ப்பத்திரிகைகளுக்கு கொழும்பில் கிராக்கி ஏற்பட்டுள்ளதாம்.

கொழும்பு நகரில் உள்ள பலகடைகளில் யாழ்ப்பாணப் பத்திரிகைகள் விற்கப்படுவதாகவும் பிரபாகரனின் படம் இருந்தால் சிங்களவர்கள் இப்பத்திரிகையை கூடுதலாக வாங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## பூபதி நினைவாக சிரமதானம்

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியில் அன்னை பூபதியின் நினைவாக சிரமதான வைபவம் கல்லூரி மாணவர்களால் இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியின் சுற்றுபுறம் சுத்திகரித்தல் உள்ளக வீதி அமைத்தல் என்பன முழுநாள் சிரமதான ரீதியில் செய்து முடிக்கப்படவுள்ளன.

அதிபரும், ஆசிரியர்களும் இணைந்து கொள்ளும் இந்நிகழ்ச்சிக்கு புலிகளின் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (32)

## ரிச்சர்ட்டி சொய்ஸா கொலை

# லங்கா புவத் ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க ஆலோசனை

பத்திரிகையாளர் திரு ரிச்சர்ட்டி சொய்ஸா கொலை தொடர்பாக லங்காபுவத்செய்திச் சேவை ஆசிரியர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொர்பாக ஆசோசனை நடாத்தப்படுகின்றது.

லங்கபுவத் செய்திச்சேவை ஆசிரியர் பொலிஸாரை ஆதாரம் காட்டி சொய்ஸாவின் கொலை தொடர்பாக வெளியிட்ட செய்தியை வழங்கியவர் யார் என்பதை தொரிவிபதற்கு தவறியதனாலே அவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுமாறு பொலிஸார் பணிக்கப்படடுள்ளாரென பாதுகாப்புராஜாங்க அமைச்சரும் பொருதோட்ட தொழில் அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரட்ன தெரிவித்துள்ளார்

## நுண்கலை...

தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் திரு. வீ. ஏ. திருஞான சுந்தரம் முரசொலிக்குத் தெரிவித்தார்.

இப் பதவிகளுக்காக 300 பேர் விண்ணப்பித்திருந்தனர் தகுதியானவர்களுக்கு மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்படுள்ளது. இந்த நேர்முகத் தேர்வுகள் கட்டம் கட்டமாகவே நடைபெறும். (09)

## நான் ஒரு அமைச்சராக...

கள் இந்த எழுத்துக்களை மாற்றுவது சிவபெருமானை நிந்திப்பதற்குச் சமனாகும் என்று பண்டிதர் கூறினார்.

சீர்திருத்தம் பற்றி எதிர்ப்புக்கள் இருக்கத்தான் செய்யும், அது காலப்போக்கில் சரியாகிவிடும். இப்போது அமைச்சு ரீதியாக மாற்றத்திற்குரிய எழுத்துக்கள் பற்றிய சுற்று நிருபம் எல்லா அமைச்சுக்களுக்கும், தாபனங்களுக்கும், பாடசாலைகளுக்கும் அனுப்பப்படுகின்றன என்று அமைச்சர் பதில் தந்தார்.

## எது சரியான பஞ்சாங்கம்

தமிழ் மக்களிடையே இரண்டு பஞ்சாங்கங்கள் இருக்கின்றன. கொழும்பு உடபட மலைநாட்டுப் பகுதிகளில் திருக்கணித பஞ்சாங்கப்படி கணிப்புக்களை மேற்கொள்கிறார்கள். வடபகுதியில் வாக்கிய பஞ்சாங்கம் முக்கியத்துவம் பெறுகிறது இதில் எந்தப் பஞ்சாங்கம் கூறுவது சரி என்று மக்கள் புரியாமல் குழம்பி நிற்கின்றார்கள். அமைச்சு இப்பிரச்சினையில் தலையிட்டு எந்தப் பஞ்சாங்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கவேண்டும் என்று மக்கள் விருப்புகின்றார்கள். இதுபற்றி அமைச்சரிடம் விளக்கம் கேட்டதற்கு இதுபற்றி நாமும் ஆராய்ந்துகொண்டிருக்கின்றோம். பல அறிஞர்களிடம் இவ்விடயத்தில் ஆலோசனைகளைப் பெற்றுள்ளோம். வடபகுதி விஜயத்தின் போது வடபகுதி சோதிடர்களிடமும், அறிஞர்களிடமும் ஆலோசனைகளைப பெற்று எந்தப் பஞ்சாங்கத்தை ஏற்றுக்கொள்வது என்று தீர்மானிபபோம்.

## எரிபொருள்

எரிபொருட்கள் இன்று இங்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இன்று வரவுள்ள எரிபொருள் ரயிலில் ஒரு லட்சம் லீற்றர் பெற்றோலும் ஒரு லட்சம் லீற்றர் டீசல் நாற்பதினாயிரம் லீற்றர் மண்ணெண்ணெ ஆகியன கொண்டுவரப் டும்.

## தமிழ்மக்களின்...

உலகம் செய்வோம் என்றநூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில்ராஜன்தொடர்ந்து பேசுகையில் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியை மக்கள் ஓர் பழைய மரபுக் கட்சியாக பார்க்கக் கூடாது. மக்களின் சுபீட்சமான மண்ணின் விடுதலைக்கான ஓர்புரட்சிகர கட்சியாக பார்க்க வேண்டும் நாம் மற்றைய கட்சிகள் போல வாக்குறுதிகளை அள்ளி வீசவில்லை ஒரேயொரு வாக்குறுதியை மட்டுமே தருகின்றோம். தியாகி திலீபன் கூறியது போல் எமது கடைசி வீரன் உள்ள வரை எம் இலட்சியம் ஈடேற போராடுவோம் என்றார்.

வலிகாமம் விடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் வானதியின் தலைமையில் நடைபெற்றவெளியீட்டு விழாவில் பலரும் உரையாற்றினர்.

## கூ. பொ. த. உயர்

பரிதாபத்திற்குரிய நிலைமையை முற்றாகப் போக்கி; முந்தைய கல்வித்திட்டத்தின் படி விரக்தியும், வெறுப்பும், அதிருப்தியும் அடைந்து கொண்டிருந்த இளைய தலைமுறையினருக்குப் புதிய உற்சாகத்தையும், உத்வேகத்துடன் கூடிய ஆர்வத்தையும் கொடுக்கவே, இப்புதிய பல்கலைக்கழகப்பிரவேச அனுமதித்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது இதன் மூலம் நாட்டுக்குக் கூடுதலான கல்விமான்களும், அறிஞர்களும் கிடைப்பார்கள்.

ஆண்டுதோறும் பல்கலைக்கழகப்பிரவேச அனுமதிக்குத் தகுதிபெறும் 36, 000 பேர்களுள், பல்கலைக்கழகங்களிற் சேருவதற்கு விண்ணப்பிப்போர் தொகை 18,000பேர்களே, இவர்களிலும் கூடமிக, மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற சுமார் 6,000 மாணவர்கள் மட்டுமே, இடவசதிகளுக்கேற்ப சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள்.

இதனால் நல்லதகுதியும், திறமையும் இருந்தும், பல்கலைக்கழகப் பிரவேச அனுமதி கிடைக்காத பலர், தங்கள் ஆற்றலுக்கும் ஆர்வத்திற்கும் ஒவ்வாத வேறு துறைகளுக்கு வீணாகப் போய்விடுகின்றார்கள் இந்த நிலைமை இனி அடியோடு மாறும்,

அஃதன்றியும், கடந்த ஆண்டுகளில் பல்வேறு விதமான கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாகிப், பலகலைக்கழகப் அபிரவேச அனுமதியைப் பெற முடியாமற் போன எல்லா மாணவர்களையும் பல்கலைக்கழகங்களிற் சேர்த்து முழுமையான கல்வி வசதிகள் வழங்கப்கடும்:- என்றுங் குறிப்பிடடார்.

## கைதடி வயோதிபர் மடத்தில்

# வயோதிபர்களுடன் வாழும் 13 வயது அனாதைச் சிறுவன்

சித்த சுவாதீனமற்ற 13 வயது மதிக்கத்தக்க வாய் பேசாத சிறுவன் ஒருவன் கைதடி வயோதிபர் மடத்தில் வயோதிபர்களுடன் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இச்சிறுவனை கைதடி சிறுவர் இல்லமும், கைதடி நவீல்ட்டும் ஏற்காத காரணத்தினாலே கைதடி வயோதிபர் மடத்தில் இச் சிறுவன் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சிறுவனுக்கு பொறுப்பானவர்கள் அல்லது உதவிகள் செய்ய முன்வருவோர் உடனடியாகா கைதடி வயோதிபர் மடத்துடன் தொடர்பு கொள்ளும் படிகேட்கப்பட்டுள்ளார்கள்.

## வசதிகுறைந்த மாணவர் நலன்கருதி

# திறந்த பல்கலைக்கழக சகாய நிதிச்சங்கம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம் வசதிகுறைந்த மாணவர்கள் நலன் கருதி சாகாய நிதி உதவித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.

ஏனைய பல்கலைக்கழகங்களைப் போல் இந்தப் பல்கலைக்கழகத்திற்கு அரசு முழுமையான உதவி வழங்குவதில்லை. ஆனால் திறந்த பல்கலைக்கழகம் மாணவர்களிடமிருந்து குறைந்த கட்டணத்தையே அறவிடுகின்றது. இக்குறைந்த கட்டணத்தை செலுத்துவதற்கு கூட ஒரு சில மாணவர்கள் சிரமப்படுவதனாலே இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

இத் திட்டத்திற்கு திறந்த பல்கலைக்கழகம் நிதியுதவி ஸ்தாபனங்களின் ஆதரவை எதிர்பார்த்துள்ளது. அத்துடன் மாணவர்கள் செலுத்தும் கட்டணத்தில் 1 சத வீதம் இந்த சகாய நிதி உதவித்திட்டத்திற்கு ஒதுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 513 வைத்திய பட்டதாரிகள் பயிற்சியாளர்களாக நியமனம்

இலங்கை முழுவதிலும் உள்ள பெரியாஸ்பத்திரிகள், தள வைத்தியசாலைகள் ஆகியவற்றில் மருத்துவக் கலாநிதிகளாகப் பதிவு செய்வதற்கேற்றதகுதியை பெறுமுகமாக மொத்தம 513 மருத்துவப்பட்டதாரிகள் தமது ஒரு வருடகாலப் பயிற்சி நெறியைப் பூரணமாகமேற்கொள்வார்கள்

இந்த ஒரு வருடகாலப்பயிற்சி நெறி முழுமையாகப் பூர்த்தியானதும், மேற்படி வைத்தியர்கள் சுகாதார அமைச்சினால் அரசினர் வைத்திய சாலைகளில் மருத்துவ அதிகாரிகளாக நியமிக்கப்படுவர்.

இப்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த வைத்தியர்கள் எவரும் தனிப்பட்ட முறைகளிற் தொழில் புரிய முடியாது.

## இலங்கைக்கு...

கையில் கொழும்பு நகரில்த்தான் கூடுதலான போதைவஸ்துப் பாவனையில் உள்ளதாகவும் மேலும் தெரியவந்துள்ளது. (03)

## தமிழக...

களின் கோரிக்கையை அடுத்து படையினர் அம் மீனவர்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த மீனவர்கள் நேற்றுக் காலை பதினொரு மணியளவில் விடுவிக்கப்பட்டனர். இம் மீனவர்களை விடுவிக்க முதல அவர்களிடையே பேசிய விடுதலைப் புலிகளின் தீவகப் பொறுப்பாளர் ஜேம்ஸ் "இந்திய மீனவர்களினால் எமது மீனவர்களின் தொழில் பெருமளவு பாதிக்கப்படுகிறது. இனிமேல் இக் கடற் பிராந்தியங்களில் எக்காரணம் கொண்டும் தொழில் செய்ய வரக் கூடாது" என்றார்.

இந்திய மீனவர்களும் விடுதலைப புலிகள் தம்மை மனிதாபிமான ரீதியில் நடாத்தியதற்கு தமது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். (20)

## செட்டிகுள ..

இலங்கை இராணுவ முகாம் ஒன்று மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த ஐந்து வருட காலமாக இக் குடும்பங்கள் தமது பகுதிக்கு செல்ல முடியாது திண்டாடுகின்றனர்.

இப் பகுதியிலேயே செட்டிகுள உதவி அரச அதிபர் விடுதி ஒன்றும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (09)

## வெளிநாடு ..

தமிழ்ப்பகுதிகளில் இவர்களின் சேவைகள் நிறைவெற்றப்படாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாடுகளில் பயிற்சி பெற்றபலர் இலங்கையில் கிடைக்கும் பதவியைவிட குறைந்தபதவியையே வெளிநாடுகளில் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)


திருநெல்வேலி அரசடி

ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானம்

ஓர் அறிவித்தல்

1990 - 91ம் ஆண்டுக்கான சித்திரத் தேர்த் திருப்பணிச் சபை திரு சுந்தரம்பிள்ளை இராசநாயகம் (B A Lond) (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள். தலைமையில் நியமிக்கப்பட்டுளளது. 1989-ம் ஆண்டில் செயற்பட்ட தேர்த் திருப்பணிச் சபை 7.4.90-ல் கலைக்கப்பட்டுள்ளது.

ச, தணிகாசலம்
அம்பாள் அடிமை
நிர்வாகி

04097


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஏ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 09.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது